
# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

VOLUME - 2 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 8

AUGUST 2018 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=


*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் ள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*


0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




**கர்த்தருக்குள் அன்பானவர்களே !**

உங்கள் யாவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் கூறிக்கொள்கிறேன். கடந்த மாத ஜாமக்காரன் உங்களில் பலருக்கு ஆசீர்வாதமாக இருந்தது என்று அறிந்து கர்த்தரை துதிக்கிறேன்.

கர்த்தருடைய பிள்ளைகள் பலர் தேவையில்லா விஷயத்துக்கெல்லாம் **பயமும், சந்தேகமும், சோர்வும்** அடைவதை உங்கள் கடிதங்கள் மூலம் அறிகிறேன். வீட்டுக்கு வீடு வாசல்படி என்பதுபோல எல்லாருடைய குடும்த்திலும் யார் மூலமாவது பிரச்சனைகள் எழும்போது சமாதான குறைவு ஏற்படும். பிரச்சனையில் சமாதான குறைவு ஏற்படும்போது அது கர்த்தருக்குள்ளான நம் விசுவாச சந்தோஷத்தை கெடுத்துவிடக்கூடாது. பிரச்சனைகள் நம் ஆவிக்குரிய சமாதானத்தை கெடுத்துவிடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். நாம் பல விஷயங்களுக்காக தேவையில்லாமல் கவலைப்படுகிறோம். கவலையும், சந்தேகமும் தான் பயத்துக்கு காரணமாகும்.

ஏதேன் தோட்டத்தில் ஆதாமிடம் **கர்த்தர் எங்கே இருக்கிறாய்** என்று கேட்டபோது அவர்களின் பதிலை கவனித்தீர்களா? ஆதி 3:10ல் **நான் பயந்து ஒளிந்துக்கொண்டேன்** என்று பதில் கூறுகிறான். இத்தனை நாள் இல்லாத **பயம்** இப்போது ஏன் வந்தது? **குற்ற உணர்ச்சிதான்** பயத்தின் காரணம்.

மாலை நேரத்தில் ஆதாமும்-ஏவாளும் கர்த்தரோடு ஏதேன் தோட்டத்தில் உலாவினவர்கள்தானே அப்படியிருக்க இப்போது **புதுபயம்** எப்படி ஏற்பட்டது? காரணம் **குற்றஉணர்ச்சி.** ஆண்டவர் வார்த்தைக்கு கீழ்ப்படியாமல்போனதே பயத்திற்கு காரணம்.

நாம் நம் வாழ்க்கையில் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டாலும் ஒரு சிறு தவறுகள் நம் வாழ்க்கையில் ஏற்பட்டுவிட்டால், நம் **மனைவியுடன், கணவருடன்** நம் அலுவலகத்தில்,

ஊழியத்தில் ஏதாவது ஒரு பகுதியில் வசனத்தின்படி வாழாமல்போனால், **கோப உணர்ச்சியை** கட்டுப்படுத்தாமல்போனால் அது வாயின் வழியாக கோப வார்த்தைகளாக வெளிப்படும். அந்த கோப வார்த்தைகள்தான் பல குடும்பங்களில் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கெடுத்துவிடுகிறது. அதனால் கணவன்-மனைவி சரீர உறவிலும் உண்மையான சந்தோஷத்தை இழப்பார்கள். ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்ப்படியாத ஒரே காரணத்தினால் முதலில் கர்த்தருக்கும் உங்களுக்கும் உறவு பாதிக்கப்படுகிறது. உங்களால் முன்புபோல் ஜெபத்தில் கர்த்தரிடம் முகம் கொடுத்து பேசமுடியவில்லை! பார்த்தீர்களா? வேதம் வாசித்து அதன் வழியாக ஆண்டவர் பேசுவதை கேட்கும் ஆவல் குறைந்துவிட்டது. இது நீடித்தால் பின்மாற்றத்தில் வெகுதூரம் போய்விடுவீர்கள். ஜாக்கிறதை!. சீக்கிரமே ஆதாமைபோல் உங்கள் தவறை ஒப்புக் கொள்ளுங்கள். விழுந்த இடத்திலிருந்து மறுபடியும் எழும்பி கர்த்தரோடு உள்ள உறவை புதுபித்துக்கொள்ளுங்கள்.

**கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படியாததால் கர்த்தர் ஏதேன் தோட்டத்தைவிட்டு துரத்திவிட்டது உண்மைதான்.**

ஆனால் நம் தேவன் மிகவும் இரக்கம் உள்ளவர். அவர் கோபம் ஒரு நிமிடம்தான். அவர் இரக்கமே மிக அதிகம். தன் இரக்கத்தால் மீண்டும் உங்களை தன்னோடு சேர்த்துக்கொள்வார். அதன் பிறகு உங்களின் குற்ற பயம் நீங்கும். சந்தேகம், சோர்வு நீங்கும். இழந்த சந்தோஷத்தை நீங்கள் திரும்ப பெறுவீர்கள். ஒருவேளை உங்கள் பிரச்சனை சூழ்நிலை மாறாமல்போனாலும் கவலையில்லாமல், பயம்இல்லாமல் வாழலாம். அதேசமயம் வீட்டில் உள்ளவர்கள் இரட்சிக்கப்படாத வர்கள் கவலைப்படுவார்கள்,பயப்படுவார்கள். ஆனால் அதே சூழ்நிலையில் அதே பிரச்சனையில் அவர்களோடு வாழும் **நீங்கள் மட்டும்** கவலையற்றுயிருப்பீர்கள். பயமில்லாது இருப்பீர்கள். **கர்த்தரை நம்பியிருப்பவர்களுக்கு** இது ஒரு வித்தியாசமான அனுபவம் ஆகும். அதன் இன்பம் அனுபவித்தால்தான் ருசிக்கமுடியும். ஒவ்வொரு வாசகர்களும் இந்த ஆவிக்குரிய அனுபவத்தில் வரவேண்டும் என்று ஜெபிக்கிறேன்.

❖ இதில் எழுதியுள்ள சிஎஸ்ஐ மாடரேட்டர் அவர்களின் அறிக்கைப்பற்றிய ஜாமக்காரனின் விமர்சனம் சிஎஸ்ஐ, லூத்தரன்,மார்தோமா ஆகிய மெயின்லைன் சபையை சார்ந்திராத மற்ற சபையினருக்கும்,வெளிநாட்டில் வாழும் புலம்பெயர்ந்த இலங்கை தமிழர்களுக்கும் என் விமர்சனம் விளங்காது. ஆகவே பொருத்துக்கொள்ளவேண்டுகிறேன்.

❖ ஜாமக்காரன் பத்திரிக்கை எங்களுக்கு அனுப்பவேண்டாம் என்பவர்கள் அதே கவரில் உங்கள் விலாசத்தை பேனாவில் இரண்டு கோடிட்டு ஸ்டாம்ப் ஒட்டாமல் அப்படியே தபால் பெட்டியில் போட்டுவிடுங்கள். அது எனக்கே திரும்ப வந்துசேர்ந்துவிடும். உடனே உங்கள் விலாசத்தை நீக்கிவிடுவோம்.

❖ **மணியாடர், இ-மெயில், பேங்க் ஆன்-லைன்** மூலமாக காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும்,நன்றியையும் அறிவிக்கிறேன். கர்த்தர்தாமே நாம் எல்லாரையும் ஆசீர்வதித்து **ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து** ஒருவருக்காக ஒருவர் ஜெபித்து இப்படியாக நாம் யாவரும் கர்த்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து சாட்சியாக வாழ்வோம். தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

**கர்த்தரின் உன்னத பணியில்**

**✍ டாக்டர்.புஷ்பராஜ்**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# லெந்துகால அழைப்பு

## CSI மாடரேட்டர் Rt. Rev. தாமஸ் கே.உம்மன் அவர்களிடமிருந்து வந்த சுற்றறிக்கை:

CHURCH OF SOUTH INDIA SYNOD SECRETARIAT

# 5 Whites Road, Royapettah, Chennai – 600 014, India

*Circular TKO Circ- 001/2017*

LENTEN CALL FOR 'CARBON FAST'

'CIRCULAR' BY THE MODERATOR

THOMAS K. OOMMEN

TO ALL THE BISHOPS IN THE CHURCH OF SOUTH INDIA

To all who read this Circular, mercy and peace!



(மாடரேட்டர் அறிக்கையில் வேதவசனத்துக்கு முரணான முக்கியமானதை மட்டும் கீழே குறிப்பிடுகிறேன்.

## நாம் பாவம் செய்துவிட்டோம்.

நாம் யாவரும சிருஷ்டிகர்த்தரால் படைக்கப்பட்டவர்களானபடியால் அவர் படைத்த **அனைத்து படைப்புகளையும்** மதிக்கவேண்டும். மாடரேட்டர் எழுதிய ஆங்கில அறிக்கையில் FLORA & FAUNA (தாவரங்கள், மரங்கள், மிருகங்கள் இவைகளை மதிக்க வேண்டும் என்று எழுதி இதற்கு ஆதி. 1:28ம் வசனத்தை மேற்கோள்காட்டி அதில் ஆண்டுகொள்வாயாக என்று கர்த்தர் கூறியதற்கு அதன்மீது **ஆதிக்கம் செலுத்துவதற்கோ** அல்லது **அழிப்பதற்கோ** அல்ல என்று அர்த்தம் கொள்ளவேண்டும் என்கிறார்.

மேலும் எசேக்கியேல் 34: 4 வசனத்தை எழுதி இதில் (ஆண்டீர்கள்) என்பதற்கு **ஆண்டுகொள்ளுதல்** அல்லது **அதிகாரம் செலுத்துதல்** என்று **அர்த்தம் அல்ல** என்கிறார். அதற்கு **அக்கரை** செலுத்துவது அதற்கு **பாதுகாவலராய்** இருப்பது என்று மாடரேட்டர் அவர்கள் புது வியாக்கியானம் கொடுக்கிறார்.

முடிவாக இப்படி **மரத்தை, மிருகத்தை** பாதுகாக்காமல்போனால் **அதுதான் பாவம்** என்று **பாவத்துக்கு புது விளக்கமும்** கொடுக்கிறார்.

மேலும் ஆதி. 9:9-10ல் நோவாவுக்கும் குடும்பத்துக்கும் **உடன்படிக்கை** செய்ததுபோல சகல உயிரினத்தோடும் **பறவைகளோடும், மிருகங்களோடும்** கர்த்தர் உடன்படிக்கை ஏற்படுத்தினார் என்றும் குறிப்பிடுகிறார்.

அது என்ன உடன்படிக்கை என்று மாடரேட்டர் அவர்கள் குறிப்பிடவில்லை. வேதத்தில் கர்த்தர் சொல்லும் உடன்படிக்கை என்னவென்றால் இனி **தண்ணீரினால்** இதை **அழிப்பதில்லை** என்ற உடன்படிக்கையைதான் கர்த்தர் குறிப்பிடுகிறார். **அந்த வார்த்தையை** மாடரேட்டர் அவர்கள் மாற்றி மேலே குறிப்பிட்ட மிருகங்கள் மரங்கள் மீது தெய்வீக பாதுகாப்பு இருக்கிறது. இந்த கருத்தை யாராவது மீறினால் அதுதான் **பாவம்** என்று பயமுறுத்துகிறார்.

மாடரேட்டர் அவர்கள் கூறும் அடுத்த **பாவம்** என்னவெறன்றால் காட்டு மிருகங்களால் இயற்கை வளங்களை நம் பாதுகாக்காவிட்டால் அதுவும் பாவம்தான் என்று குறிப்பிடுகிறார். அதற்கு மத்தேயு. 6:26ம் வசனத்தை மேற்கோள் காட்டுகிறார். அதனால் அந்த வசனத்தின் அர்த்தம் என்னவென்றால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து **ஆகாயத்து பட்சிகளை** எப்படி போஷிக்கிறார், உணவளித்து காப்பாற்றுகிறார் என்று கூறி இப்படி **ஆகாய பட்சிகள் எதுவும்** என்னிடம் வேண்டிக் கொள்ளாமலே நான் அவைகளை காப்பாற்றும்போது உன்னை நான் காப்பாற்றமாட்டேனா?. மேலும் பறவைகள் மிருகங்களைவிட நீங்கள் எனக்கு விசேஷித்தவர்கள் அல்லவா? என்று நமக்கு ஆறுதல் அல்லது தைரியம் கூற இந்த பட்சிகள் உதாரணத்தை இயேசு கூறினார். ஆனால் மனிதன் அதை அழிக்கக்கூடாது என்பதற்காக இந்த உதாரணத்தை இயேசு கூறிய மாதிரி மாடரேட்டர் எழுதியுள்ளார். அதனால் மிருகங்கள் அழிக்கப்பட்டால் அது **பாவம்** என்கிறார் மாடரேட்டர் அவர்கள்.

## சரியான விளக்கம்:

காட்டுக்குள் வாழும் ஒரு மிருகத்துக்கு மற்றொரு **மிருகம் தான் ஆகாரம்.** புலிக்கு மானை அடித்து சாப்பிடுவதுதான் ஆகாரம். **பாம்புக்கு எலி** போன்றவற்றை பிடித்து சாப்பிடுவதுதான் ஆகாரம். அப்படியே அந்த அனைத்து மிருகங்களையும் **மனிதனுக்கு ஆகாரமாய்** ஏற்படுத்தினேன் என்று கர்த்தர் கூறுகிறார். பேதுருவின் தரிசனத்தில் ஒரு பெரிய கூட்டுக்குள் சகலவிதமான மிருகங்களும், பட்சிகளும் இருந்தது. கர்த்தர் பேதுருவை நோக்கி **அடித்து புசி** என்று கூறுகிறார். அதன் அர்த்தம் **ஜாதி பார்க்கக்கூடாது. இனம் பார்க்கக்கூடாது** என்பதற்காக கர்த்தர் அந்த தரிசனத்தின் மூலமாக பேதுருவை உணர்த்தினார். இயேசுவே மீனை பிடித்து அறுத்து துண்டாக்கி பொரித்து வைத்து பசியுடன் வரும் சீஷர்களுக்காக காத்திருந்து அதை அவர்கள் சாப்பிடவும் கூறினாரே!.

மரம் வெட்டப்படாவிட்டால் **ஆயர், பிஷப், சபை மக்கள்** உட்கார நாற்காலி செய்ய முடியாதே? இதற்கு உலக மக்கள் அறிய சுருக்கமாக சரியான விளக்கத்தை கூறவேண்டும். **சுற்றுசூழல் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த கருத்து மிகவும் நியாயமானது.** இதற்கு மாற்று கருத்து இல்லை. இதை **சிஎஸ்ஐ மட்டுமல்ல, அனைத்து மனிதனும் செயல்படுத்தவேண்டியது** இன்றைய உலகில் மிக முக்கிய விஷயமாகும். **காடுகள் அழிக்கப்படகூடாது. மரங்கள் வெட்டி காடுகள் அழிக்கப்படுவதால் மழை பெய்யாது. மழை இல்லை** என்றால் மனிதன் வாழ முடியாது.

**(கார்பன் டை ஆக்சைடு) - அசுத்த காற்றுகளை இலை** தாவரங்கள் கிரகித்துக் கொள்கிறது. அதனால் நம் படுக்கை அறைகளில் குரோடன்ஸ் செடிகளை வைக்கிறோம். மனிதன் உறங்கும்போது மூக்கு வழியாக விடும் கரிமிலவாய்வை அந்த இலைழகள் இழுத்துக்கொண்டு, நல்ல காற்று **(ஆக்ஸிஜன்)** அறைக்குள் வர வழி உண்டாக்குகிறது. ஆகவே தான் ஒரு மரம் வெட்டினால் 20 மரக்கன்றுகளை நட்டு மரங்களை வளர செய்ய வேண்டும் என்று மரம் நடுவிழா ஏற்பாடுகளை செய்து உலகமனைத்திலும் உள்ள நாடுகள் மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாக்கி மக்கள் **காடுகளை அழிக்காமல்** பாதுகாக்க ஒரு சட்டமும் இயற்றியுள்ளார்களே.

இதை சபை மக்களுக்கு பிரசங்கத்திலும், பள்ளிக்கூடங்கள் கல்லூரிகள் மூலமாகவும். CSI சபைகள் நடத்தும் பள்ளிக்கூடங்கள் கல்லூரிகள் மூலமாக அறிவுறுத்தலாமே!. இதற்கு 40 நாள் உபவாசம் எதற்கு?அவசியம் இல்லையே!. இதற்காக 40 நாட்கள் **லெந்துகாலத்தில்** சுற்று சூழலுக்காக மிருகவதை நிறுத்தப்பட வேண்டும் அதற்காக **உபவாசம்** இருக்கவேண்டும் என்று கூறியிருக்கவேண்டாமே. அதற்காக மோசே 40 நாட்கள் உபவாசம் எடுத்தார் என்றும் **இயேசு 40நாள் உபவாசம்** எடுத்தார் என்றும் ஆன்மீகத்துக்கு சம்பந்தமில்லாமல் உபவாசத்தை மாடரேட்டர் அவர்கள் கொச்சைபடுத்தியிருக்ககூடாது. உபவாசம் எத்தனை முக்கியமானது. அதை மிருகங்களுக்காக மரங்களை காப்பாற்ற உபவாசம் எடுக்க கட்டளையிட்டு CSIல் உள்ள 24 டையோசிஸ் **பிஷப்மார்களுக்கும்,சபை ஆயர்களுக்கும்** இப்படி ஒரு அறிக்கை தேவைதானா?

## மாடரேட்டரின் இந்த அறிக்கைப்பற்றி சிஎஸ்ஐ சபையில் உள்ள யாருக்கும் தெரியவில்லை!.

மத்திய கேரளா சிஎஸ்ஐ டையோசிஸ்ஸில் 2 ஆயர்கள் டையோசிஸ் ஆபீஸிலிருந்து இந்த அறிக்கையை எடுத்தேன் என்று கூறி அதில் ஒன்றை உங்களுக்கு அனுப்புகிறேன் என்று எழுதியிருக்கிறார். மேலும் இது எந்த சிஎஸ்ஐ சபையிலும் வாசிக்கப்படவில்லை. ஒரு சில ஆயர்கள் அல்லது பிஷப்மார் மாடரேட்டர் பதவியின் அதிகார பயத்தினால் அதை வாசித்து இருக்கலாம் என்றாலும் இந்த அறிக்கையை வாசித்ததாக எந்த டையோசிஸ்சிலிருந்தும் ஜாமக்காரனுக்கு தகவல் இல்லை. சென்னையிலிருந்து ஜாமக்காரன் வாசகர்களின் சகோதரர் ஒருவர் சென்னை சிஎஸ்ஐ சினாட்டிலிருந்து அந்த அறிக்கையை எடுத்து பெரும் மனபாரத்தோடு இதை எனக்கு அனுப்பினார். அந்த சகோதரனுடைய **கேள்வியும்,** மத்திய கேரள டையோசிஸ் **ஆயருடைய** கேள்வியும் ஒன்று போல இருந்தது. அது என்னவென்றால் CSI எதை நோக்கி பயணிக்கிறது? என்பதாகும். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்துக்கும் மாடரேட்டரின் அறிக்கைக்கும் சம்பந்தம் இல்லையே என்கிறார்கள். அது உண்மைதானே!.

## CSIயிலிருந்து மற்றொரு ஆபத்தான செய்தி

மாடட்டேர் அவர்கள் அனுப்பிய அறிக்கையில் ஆபத்தான ஒரு வார்த்தையை உபயோகித்து உள்ளார். அது தான் இந்தியாவில் வாழும் நாம் யாவரும் **ஒரு குடும்பம்** என்பதாகும். அதுவும் அதற்கு **இறைக்குடும்பம்** என்று பெயர் வைத்திருக்கிறார். ஆங்கில அறிக்கையில் மாடரேட்டர் உபயோகித்த வார்த்தை (Vasudaiva Kutumbakam) வாசுதேவ குடும்பம் அல்லது வசுதேவ

குடும்பகம். இதில் எல்லாவிதமான **மதத்தில் உள்ளவர்கள்** எல்லா விதாமன இனத்தவர் குறிப்பாக ஆண்கள், பெண்கள். ஆண்புனர்ச்சிகாரர்-Gay, பெண் புணர்ச்சிகாரர் -Lesbion என்ற வித்தியாசம் இல்லாமல் நாம் யாவரும் ஒரு குடும்பமாக நம் CSI திகழவேண்டும் என்பதாகும். இந்த குறிப்பிட்ட கருத்தை 2018 மார்ச் 9ம் தேதி (Lenten Meditation- 2018) என்ற பெயரில் கூடின கூட்டத்தில் பேசப்பட்டு அது அறிக்கையாகி வெளிவந்துள்ளது. அந்த கூட்டத்துக்கு வந்தவர்கள் சுமார் 25 நபர்களுக்குமேல் இருக்காது.

## இறைக்குடும்பம் - வசுதெய்வ குடும்பம்

மாடரேட்டர் அவர்கள்உபயோகித்த **இறை குடும்பம் வாசதேவ குடும்பகம்** என்ற வார்த்தை நமது இந்திய பிரதமர் திரு.**மோடி** அவர்கள் உபயோகித்த மிக முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய பதமாகும். 2018 ஜனவரி மாதம் Swiss நாட்டில் **லாவோஸ்** என்ற நகரில் உலக பொருளாதார மாநாட்டில் திரு.மோடி அவர்கள் இந்த வார்த்தையை பயன்படுத்தினார். திரு.மோடி அவர்கள் பேசியதாவது இந்திய ஒற்றுமை மற்றும் **ஒருமைபாட்டில்** பெரும் **நம்பிக்கை** வைத்துள்ளது. **வசுதெய்வ குடும்பகம்** என்பது **இந்திய கலாச்சாரத்தின்** தத்துவம் ஆகும்.

உலகமே **ஒரு குடும்பம்** என்பதுதான் இதன் அர்த்தம். நாம் யாவரும் **பூமிதாயின்** குழந்தைகள். நம் தேவைக்கு ஏற்ப **இயற்கை வளங்களை** பயன்படுத்தவேண்டும என்று கூறினார்.

இவரின் செய்தியில் **வசுதெய்வ குடும்பம்** (இறைக்குடும்பம்) **கார்பன் வெளியேற்றம்** (Corbon Fast ) **பூமித்தாய்** இப்படிப்பட்ட வார்த்தைகள் **குறிப்பிடதக்கவையாகும்.** திரு. மோடி அவர்களின் **கருத்தையும்.** அவர் உபயோகித்த வார்தையும் CSI மாடரேட்டர். தாமஸ் K. உம்மன் அவர்களும் **தன் அறிக்கையில்** பிரதிபலித்திருப்பதுதான் பலரின் **கேள்விக்குறியாக** உள்ளது.

இவர்கள் குறிப்பிடும் குடும்பத்தில் நான் மேலே குறிப்பிட்டதுபோல Gay ஆண்புனர்சி. பெண் புணர்ச்சி காரர்கள் Lesbion இவர்கள் யாவரும் சேர்ந்த CSIயின் நவீன **குடும்ப உபதேசம்.** இந்த **பாலின சமத்துவம்** என்பது CSIயின் ஒரு முக்கிய நோக்கம் ஆகும். இதை CSI (Gender Conclave) என்ற தலைப்பில் கூடிய கூட்டத்தில் அறிவிக்கப்பட்டதாகும். இந்த குடும்பத்தின் பெயர் Desmond Tutu ஆகும் இந்த பெயர் உள்ளவர்தான் இந்த கருத்தையும் எழுதினார். மாடரேட்டரின் இந்த குறிப்பிட்ட அறிக்கையின் முடிவில் **ஊழியம் கொள்ளும்படி அல்ல ஊழியம் செய்யும்படி** அழைக்கப்பட்டோம். என்று எழுதிமுடிக்கிறார். இது இயேசுகிறிஸ்து சீஷர்களின் கால்களை கழுவும்போது கூறிய வார்த்தையாகும். மாடரேட்டர் அவர்களுக்கு நான் தனிப்பட்ட முறையில் **எழுதிய கடிதத்தில்,** மாடரேட்டர் **பதவியை** குறித்து நான் எழுதிய வார்த்தையாகும். ஆனால் இப்போது எழுதிய அறிக்கைக்கும் இந்த வார்த்தைக்கும் ஒரு சம்பந்தமும் இல்லையே!. இந்த தகவல்களில் மூலம் **CSI சபை எந்த திசையில்** சென்றுகொண்டிருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். ஆன்மீகமா?அல்லது உலகத்தோடுள்ள வேஷமா?

## எச்சரிக்கை வேத வசனங்கள்

- ❑ எந்த விதத்தினாலும் ஒருவனும் உங்களைமோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் விசுவாச துரோகம் முந்திநேரிட்டு கேட்டின் மகனாகிய **பாவ மனுஷன்** வெளிப்பட்டால் ஒழிய அந்த நாள் வராது. (2 தெச. 2:3)

- **நோவா,** சேம். காம், யாப்பேத் என்ற மூன்று குமாரரை பெற்றான். பூமியானது தேவனுக்கு முன்பாக சீர்கெட்டிருந்தது. பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது.தேவன் பூமியை பார்த்தார். இதோ அது சீர்கெட்டதாய் இருந்தது. மாம்சமான யாவரும் பூமியின் மேல் **தங்கள் வழியை கெடுத்துக்கொண்டிருந்தார்கள்.** (6:10- 12). நோவாவின் நாட்களில் நடந்ததுபோலவே **மனுஷ குமாரனுடைய** நாட்களிலும் நடக்கும். நோவா பேழைக்குள்பிரவேசித்த நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்து குடித்தார்கள். பெண்கொண்டும் கொடுத்தும் வாழ்ந்தார்கள். உலகப்பிரளயம் வந்து எல்லாரையும்**அழித்துபோட்டது.** (லூக்கா 17:26)

- சோதோமில் ஜனங்கள் பொல்லாதவர்களும், கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்.(ஆதி 13:13)

- **லோத்தினுடைய** நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும், ஜனங்கள் புசித்தார்கள். குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே **வானத்திலிருந்து** அக்கினியும், கந்தகமும் வருஷித்து **எல்லாரையும் அழித்துபோட்டது** (லூக்கா 17:28-29)

- அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா?. வஞ்சிக்கப்படாதிருங்கள்,சுயபுணர்ச்சிக்காரர்கள்,வேசிமார்க்கத்தாரும்,**விக்கிரக ஆராதனைக்காரரும்**, விபச்சாரகாரரும், **சுயபுணர்ச்சிக்காரரும்,** ஆண் **புணர்ச்சிக்காரரும்,** திருடரும், **பொருளாசைக்காரரும்**, வெறியரும், ஊதாசினம், கொள்ளைக்காரரும், **தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிபட்டவர்களாயிருந்தீர்கள்** ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும் இரத்தத்தினாலும் நமது தேவனுடைய ஆவியினாலும் **கழுவப்பட்டீர்கள்,** பரிசுத்தம் ஆக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள். (1 கொரி. 6:9-11)

- மனுபுத்திரனே, நான் உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு **காவல்காரனாக** வைத்தேன் ஆகையால் **நீ என் வாயினாலே வார்த்தையை** கேட்டு **என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக.** (எசேக்கியேல். 33:7)

# CSI மாடரேட்டர் அவர்கள் உபயோகித்த கடவுள் குடும்பம் என்பது எப்படி தவறு ?

**ஒரே** குடும்பம், **ஒரே** கொள்கை. **ஒரே** பொதுச்சட்டம், **ஒரே மதம்** என்ற திரு.மோடி அவர்களின் கொள்கையை **நம் தெய்வம் ஒத்துக்கொள்வதில்லை. ஆனால் நம் சிஎஸ்ஐ மாடரேட்டர் அவர்கள் இந்த கொள்கையை சிஎஸ்ஐயில் புகுத்த முயல்வதைபோல் இருக்கிறது.** இந்தியாவில் ஒவ்வொரு **மதத்துக்கும்** ஒவ்வொரு தெய்வம் அல்லது **பல தெய்வங்கள்** உண்டு. **எல்லா தெய்வமும் ஒன்றாகாது.**

- **இந்து மதம்** மனிதனும் (ஜீவாத்மாவும்) கடவுளும் (பரமாத்தாவும்) ஒன்று என்று கூறுகிறது.

- **முகம்மதிய** மதத்திலோ **அல்லாவை** தவிர வேறு **தெய்வம் இல்லை** என்கிறது.

- **கௌதம புத்தர் மனஅமைதி** தேடி அலைந்தார். அவர் சாகும்வரை அவர் தேடிய அமைதி அவருக்கு கிடைக்கவில்லை. ஆனால் அவர் உபதேசத்தை அரைகுறையாக புரிந்துக்கொண்ட மக்கள் சுமார் 500 வருடங்களுக்கு பிறகு **அவரை தெய்வமாக** கும்பிட ஆரம்பித்துவிட்டனர். நான் தெய்வமல்ல என்று அவரே கூறிய பிறகும் அவரை தெய்வமாக வழிபடுகிறார்கள்.

- **கேராளாவில்** ஓணம் பண்டிகையில் கேரளாவை ஆண்ட **மகாபலி** என்ற மன்னனை **தெய்வமாக** ஆராதிக்க ஆரம்பித்தனர். **சின்டோ** என்ற மதமும் தங்கள் ராஜாவையே கடவுளாக வணங்குகிறது.

- இந்து மதத்தினரையும் - **முகமதிய**(இஸ்லாம்) மதத்தினரையும் ஒன்றுபடுத்தும் நோக்கத்தோடு தோன்றியதுதான் சீக்கிய மதம். குருநானக் மூலமாக அந்த **சீக்கிய மதம்** உருவானது.

- காடுகளில் வாழும் **ஆதிவாசி** மக்கள் ஆவிகளை வணங்குகிறார்கள். காடுகளில் தீ பிடித்தால் அந்த நெருப்புக்கு பயந்து அந்த நெருப்பு தங்களை ஒன்றும் சேதப்படுத்தாதபடி இருக்க அதற்கு பலியிட்டு அந்த நெருப்பையே தெய்வமாக வணங்குகிறார்கள்.

- இந்தியாவில் உள்ள **முழு இந்துக்களையும்** வெறுத்து எதிர்த்து ஆரம்பிக்கப்பட்ட மதம்தான் **பௌத்த மதமும், ஜைன மதமும் ஆகும்.** ஆகவே இவர்கள் கூறும் எல்லா மதமும் ஒன்று என்று கூறுவது முட்டாள்தானமாகும். சில இந்துமத ஆன்மீகவாதிகள் எல்லாரையும் முட்டாளாக்க கூறும் இரண்டு உதாரணங்கள்.

**நதிகள் :** உலகில் நதிகள் எத்தனையானாலும் அது எல்லாம் கடலில்தான் சேருகிறது. ஆகவே நீ அந்தந்த மதத்திலேயே இரு. உன் தெய்வத்தையே வணங்கு. மரித்தால் **எல்லாரும் ஒரே இடத்தில் தான் போய் சேருவோம்.** கேட்க இது நன்றாக இருக்கிறது. ஆனால் அது உண்மையல்ல. அமெரிக்காவில் இரண்டு நதிகள் உண்டு. அதன் ஆரம்பம் தெரியும். ஆனால் அவைகள் இரண்டும் கடலில் சேர்வதில்லை. ஆகவே இவர்கள் எல்லா மதமும் ஒன்று என்ற கொள்கைக்கு நதிகள் உதாரணம் பொருந்தாது.

**தண்ணீர் :** மேலே சொன்ன கருத்தை உறுதி செய்யும வகையில் **தண்ணீர்** எல்லாம் ஒன்றுதான். ஆனால் அவரவருடைய பாஷையில் மட்டும் **பெயர்** மாறுபடுகிறது.

தமிழிலே - தண்ணீர்

மலையாளத்தில் - வெள்ளம்

தெலுங்கில் - நீலூ

ஆங்கிலத்தில் - வாட்டர்

ஹிந்தியில் - பானி

ஆனால் பாஷையில் தண்ணீருக்கு **பெயர்கள்** மாறுபட்டாலும் தண்ணீர் எல்லாம் தண்ணீர்

ஆகாது. நம் **டாய்லெட்** (Rest Room) ல் உள்ள தண்ணீரும் தண்ணீர்தான். ஆனால் நாம் ஒரு கரண்டியில் அதிலிருந்து எடுத்து டம்ளரில் ஊற்றி குடிக்கமுடியுமா? கேள்விகேட்ட அந்த ஆன்மீகவாதிகள் தான் அந்த தண்ணீரை குடிப்பார்களா? கடல் முழுவதும் தண்ணீர்தான் குடிக்கமுடியுமா? எல்லா தண்ணீரும் ஒன்று என்று உதாரணம் கூறி எல்லா தெய்வத்தையும் எல்லா மதத்தையும் ஒன்றாக்க முடியுமா ? நிச்சயம் முடியாது.

**மாடரேட்டர்,** பிரதமர் **மோடி** ஆகிய இவர்கள் யாரானாலும் இந்தியாவில் அல்லது உலகத்தில் உள்ளவர்கள். அனைவரும் ஒரே கடவுள் குடும்பம் அதாவது **வசுதேவ** குடும்பம் என்று கூறவே முடியாது.

## ஜாமக்காரனின் கருத்து

**உலக மக்களை - இந்துமத** மக்களை அல்லது மற்ற எந்த **மதத்தினராலும் எந்த தெய்வத்தை** ஆராதித்தாலும் அவர்கள் **அரவாணிகளாலும்** நாம் அவர்களை **வெறுக்கவோ ஒதுக்கவோ** கூடாது. **நாம் எல்லாரையும்** நேசிக்க கடமைபட்டுள்ளளோம். **இயேசுவும்** கிறிஸ்தவர்களுக்காக இந்த உலகத்தில் பிறக்கவில்லை. **முழு உலக மக்களுக்காகவும்** அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்படவுமே இவ்வுலகில் பிறந்தார். **விபச்சாரிகள், ஆண்புணர்ச்சிகாரர்கள், அரவாணிகளானாலும்** அவர்கள் **மனம்திரும்பினால்** பரலோக இராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். கர்த்தர் இவர்கள் யாவரையும் வெறுக்கவும் இல்லை, ஒதுக்கவுமில்லை.

திரு. **மோடி** அவர்களின் **கருத்தையும்** அவர் உபயோகித்த வார்தையும் CSI **மாடரேட்டர்** தாமஸ் K.உம்மன் அவர்களும் **தன் அறிக்கையில்** பிரதிபலித்திருப்பதுதான் பலரின் கேள்விக்குறியாக உள்ளது.


இவர்கள் குறிப்பிடும் கடவுள் **குடும்பத்தில்** நான் மேலே குறிப்பிட்டதுபோல ஆண்புனர்சி (Gay) பெண் புணர்ச்சிகாரர்கள்(lesbian) இவர்கள் யாவரும் சேர்ந்ததுதான் **கடவுள் குடும்பம்** என்பது CSI யின் தோன்றியிருக்கும் ஒரு **முக்கிய நவீன உபதேசம்** ஆகும்.

யாராகஇருந்தாலும் **மனந்திரும்பி இயேசுவை** ஏற்றுக்கெள்ளாமல்போனால் ஒரே கடவுள் **குடும்பம்** ஆகமாட்டார்கள்.


BISHOP SAMUEL AMIRTHAM

## நவீன பொது கொள்கை உபதேசம்:

இப்படிப்பட்ட **நவீன பொதுகொள்கை** உபதேசத்தை நம் CSIக்குள் முதன்முதலில் **தெற்கு கேரளா டையோசிஸ் பிஷப்** அவர்களும், முன்னாள் **மதுரை அரசரடி வேதாகம கல்லூரியின்** முதல்வருமான பிஷப்.**சாமுவேல் அமிர்தம்** அவர்கள்தான் இதுபோன்ற **நவீன பொது கொள்கை உபசேத்தை** கொண்டுவந்தார்கள். இதன் தொடர்ச்சி அடுத்தப்பக்கத்தில் தொடர்ந்து வாசிக்கலாம்.




**இரண்டாவது** CSI சினாட் 1992ம் வருடம் ஜனவரி மாதம் 15ம் தேதி கூடிய கூட்டத்தில் **முருகன் - அல்லா - இயேசு** மூவரும் ஒன்று. மூவரையும் நாங்கள் வணங்குகிறோம் என்று அச்சடிக்கப்பட்ட ஆராதனை கிரமம் **சிஎஸ்ஐ சினாட் அக்கூட்டத்தில்** அறிமுகப்படுத்தியது. அன்றே **எல்லா தெய்வமும் ஒன்று எல்லா மதமும் ஒன்று** என்ற பிசாசின் கொள்கையை CSIக்குள் சிஎஸ்ஐ சினாட் நுழைக்கமுயன்றது. அதை ஜாமக்காரனில் எழுதி எச்சரித்ததால் அந்த உபதேசம் CSIக்குள் நுழையாமல் சிஎஸ்ஐ சபைகள் காப்பாற்றப்பட்டது.



- **மூன்றாவதாக இப்போதுள்ள மாடரேட்டர்** அதே நவீன உபதேசத்தை வேறு ரூபத்தில் CSIயில் நுழைக்கப் பார்க்கிறார்

- இப்போது அதையே நவீனப்படுத்தி **இறை குடும்பம், வசுதேவ குடும்பகம்** என்ற பெயரில் நம் CSI மாடரேட்டர் அவர்கள் 24 CSI டையோசிஸ்சுக்கும் **லெந்துகால அழைப்பு** என்ற **கவர்ச்சி பெயரில்** அறிமுகப்படுத்தியுள்ளார்.

நல்லவேளை நம் CSI மக்களும், **ஆயர்மாரும்,** பெரும்பாலான **பிஷப்மாரும்** விழிப்போடு இருந்ததால் **மாடரேட்டரின் அறிக்கையை மக்கள் பார்க்காதவாறு பார்த்துக்கொண்டார்கள்.** அப்படிப்பட்ட ஆயர்களுக்கும், பிஷப்மார்களுக்கும் CSI சபை விசுவாசிகள் பெயரிலும் ஜாமக்காரன் பெயரிலும் நன்றி கூறுகிறேன்.

- நம் CSI மாடரேட்டர் **Most Rt.Rev.Thomos K.Oomman** அவர்கள் நம் **இந்திய பிரதமரையும்**, அவர் **கொள்கையையும்** BJP கட்சியின் கொள்கையையும் பின்பற்றுகிறாரா?, **இயேசுவையும்** அவர் **உபதேசத்தையும்** பின்பற்றிகிறாரா?.

# LIBERAL THEOLOGY Vs SPIRITUAL THEOLOGY

# நவீன உபதேச வேதாகம கல்லூரி Vs ஆவிக்குறிய உபதேச வேதாகம கல்லூரி

**இயேசு கூறினார், நீங்கள் புறப்பட்டுபோய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி ... நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைகொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்றார். ஆங்கிலத்தில்** (Teach Them) **என்று** எழுதப்பட்டுள்ளது. இந்த **உபதேசத்துக்குதான்** வேதபாடம் படித்து கொடுக்க வேதாகம கல்லூரி அவசியம். கல்லூரி என்ற பெயரில் உள்ள கட்டிடத்திலேயே படிக்க வேண்டும் என்றில்லை. பல பெயர்களில் வேதாகம கல்லூரி படிப்பு படித்தவர்கள் வேத பாடம் நடத்தும் இடங்கள் உண்டு.

ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் **அடிப்படை வேதாகம** கல்வி அறிவு அவசியம். **ஊழியக்காரன் ஆயராக ஊழியம்** செய்யவோ மட்டும் வேதாகம கல்லூரி படிப்பு தேவை என்பதல்ல. நம் தனிப்பட்ட ஆவிக்குறிய ஜீவியத்துக்கு **வேத அறிவும்** நம் வேத புஸ்தகத்தின் சரித்திர பின்னணி **வேதாகம** கலாச்சார முறைகளை கற்பது அல்லது அறிந்துக்கொள்வது நம் ஆவிக்குறிய ஜீவியத்தில் வசனத்தில் வளர மிகவும் பயன்படும். அதற்கு நமக்கு யாராவது **உபதேசிக்க வேண்டும்.**

அப்படிப்பட்ட வேதாகம அறிவிற்காக தெரிந்தெடுக்கப்படும் **வேதாகம கல்லூரி** எது என்பதுதான் மிக முக்கியம். நம் CSI, லூத்தரன் மார்தோமா ஆகிய மெயின்லைன் சபைகளில் ஊழியராக வேண்டுமானால் ஷெராம்பூர் வேதாகம **கல்லூரியுடன்** தொடரபுகொண்ட UTC, Bangalore, TTC( மதுரை), Kannamoola (திருவனந்தபுரம் ), Marthoma தியாலாஜிக்கல் செமினரி **(கோட்டயம்)** ஆகிய வேதாகம கல்லூரிகளில் **படித்திருந்தால்தான்** சபைகளில் ஆயராக பணிசெய்யமுடியும். மேலே குறிப்பிட்ட **வேதாகம கல்லூரிகள்** யாவும் **நவீன உபதேசம்** கொண்டதாகும். அதனால்தான் இவைகளை Liberal தியாலஜி என்று அழைப்பார்கள்.

இந்த லிபரல் தியாலஜி கல்லூாரியில் படிக்க சென்றவர்கள் பெரும்பாலானவர்கள் **ஆவிக்குறியவர்களாக** இருக்கமாட்டார்கள். இவர்கள் **ஆவிக்குறிய காரியங்களுக்கு** முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள். CSI மாடரேட்டர் அவர்கள் எழுதியதுபோல **இயற்கை தாவரங்களை** நாம் காக்காமல் போனால் அது **பாவம்** என்கிறார். அவர் அப்படி கூறியது. ஒரு சின்ன உதாரணமே!.

24 **திருமண்டலங்களையும்** வழிநடத்த வேண்டிய **தலைமை மேய்ப்பனுக்கு எது பாவம்** என்பதை குறித்தும் **உபவாசத்தின்** நோக்கம் என்ன? அதனால் கிடைக்கும் பலன் என்ன? என்பதை குறித்தும் அறியாதிருப்பதுதான் துக்கமான விஷயமாகும். 24 CSI **திருமண்டலத்தையும் தவறான வழிக்கு** அழைத்துபோவதை நான் அறிந்தபின்னும் நான் அவைகளை குறித்து எழுதாதிருப்பது எப்படி?

**இதுதான் லிபரல் தியாலிஜி** என்பது. இதைதான் நம் மாடரேட்டர் & CSI சினாடும் **வசுதெய்வ குடும்பகம்** என்று கூறுகிறார்கள். ஆண் பெண் வித்தியாசம் இருக்கக்கூடாது.

ஆண்புணர்ச்சிகாரர் - பெண் புணர்ச்சிகாரர்களை **ஐக்கியபடுத்தி** நாம் யாவரும் ஒரு **இறை குடும்பமாக** மாறுவோம் என்று நம் **மாடரேட்டர்** அவர்கள் சிஎஸ்ஐ சபைகளுக்கு அழைப்பு விடுத்திக்கிறார்.

**CSI ஆபத்தான வழியில் பயனிக்கிறது** என்பது நூற்றுக் நூறு உண்மையல்லவா ?

**ஜாமக்காரன்:** இதை வாசிக்கும் 24 **டையோசிஸ் பிஷப்** மார்களுக்கும் அதில் உள்ள **ஆயர்களுக்கும்** சபை **விசுவாசிகளுக்கும்** நிர்வாகிக்களுக்கும் Dr. புஷ்பராஜ் ஆகிய நான் அன்புடன் வேண்டிக்கொள்வது. தயவுசெய்து CSIயை காப்பாற்றுங்கள். இப்படிப்பட்ட **லிபரல் தியாலஜி** உபதேசத்தின் ஆட்கள் நம் சபைக்குள் இருப்பதால் நம் சபை மக்களின் வாழ்க்கையில் ஆவிக்குறிய வளர்ச்சி இல்லை. இப்படிப்பட்ட ஆயர்கள் பிஷப்மார். மாடரேட்டர் ஆகிய இவர்கள் எந்த ஆவிக்குறிய ஆகாரமும் டையோசிஸ்ஸின் சபை மக்களுக்கு அளிப்பதில்லை.

இவர்கள் செய்யவேண்டிய ஆவிக்குறிய ஏற்பாட்டை **சபை ஆயர்கள்** சபை பொருப்பாளர்கள் **என்னை போன்ற** ஊழியர்களை அழைத்து கன்வெண்ஷன் நடத்த விரும்பினால் **பிஷப்மார் பயப்படுகிறார்கள்.** பிரசங்கிப்பவர் தங்கள் தவறை பிரசங்கத்தில் **சுட்டிக்காட்டிவிடுவாரோ** என்று பயப்படுகிறார்கள். நான் கூறுவது என்னவென்றால் என்னை கன்வெண்ஷனில் பேச அழைப்பதால் **சபை ஆயர்கள் பிஷப்பின்** அல்லது நிர்வாகிகளின் கோபத்துக்கு ஆளாகாமல் இருக்கவேண்டு மானால். அவரவர் டையோசிஸ் பிஷப் ஆவிக்குறியவராக மாற ஜெபிப்போம். கரத்தர் அவர் மனதை மாற்றுவார் அல்லது வேறு ஏற்பாடுகளை செய்வார். அவர் செய்யநினைத்து தடைபட்டதில்லை.

நான் இப்படி **மாடரேட்டரின் நவீன உபதேசத்தை** விமர்சிப்பது அவரை அவமானபடுத்துவதற்கல்ல. நம் CSIசபைகளை **நவீன உபதேசத்திலிருந்து** காப்பாற்றுவதற்காகவே இதை நான் எழுதுகிறேன். இதை நான் எழுதுவதால் **சிஎஸ்ஐ மாடரேட்டர்** அவர்களுக்கு என்மேல் பெரும் **வெறுப்பும், கோபமும் கூடும்** என்பதை நான் அறிவேன்.

## சபை மக்கள் சிந்திக்க சில வேத வசனங்கள்

தாவீது கூறுகிறான். **கர்த்தாவே உமக்கு பிரியமானதை செய்ய என்னை போதித்தருளும்.** சங் 143:10. கர்த்தருக்கு எது பிரியமோ அதை செய்வதுதான் ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவனின் கடமையாகும். ஒருவன் ஆவிக்குறியவனாக இருந்தால் ஆவிக்குறியதைப்பற்றிதான் சிந்திப்பான்.

பவுல் கூறுவதை கவனியுங்கள் **ஆவிக்குறியவன்** எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனால் அவனோ வேரு யாராலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான. 1 கொரி. 2:15

மேலும் பவுல் கூறுவதை கவனியுங்கள் 1 கொ. 2:13 **நாங்கள் மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல் பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி ஆவிக்குறியவைகளை ஆவிக்குறியவைளோடே சம்பந்தப்படுத்தி காண்பிக்கிறோம்.**

**ஜென்ம சுபாவ மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவனுக்கு அது பைத்தியமாக தோன்றும்.**

**சபைகளுக்கு தலைவன் ஆவிக்குறிய விஷயத்தை வேதத்திலிருந்து மேற்கோள்காட்டி சபையை ஆவிக்குறிய வழியில் நடத்தவேண்டும்.**

அதைத்தான் பவுல் **ஆரோக்கியமான உபதேசம்** என்று தீத்து 1:9ல் எழுதுகிறார். **சரீரம்** ஆரோக்கியமாக இருக்க நல்ல சத்துள்ள உணவும், பயிற்சியும் வேண்டும். ஆத்துமா **ஆரோக்கியமாக** இருக்க நல்ல வசனங்களை வேதத்திலிருந்து தெரிந்தெடுத்து உபதேசிக்க வேண்டியது அவசியம்.

**அவிசுவாசிக்கும்- விசுவாசிக்கும் சம்பந்தமேது** என்று பவுல் கேட்கிறார். **ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லும்படி** பவுல் தீத்துவிடம் கூறுகிறான்.

"நீயோ **ஆரோக்கியமான உபதேசத்திற்கேற்றவைகளை பேசு"** தீத்து 2:1. என்று மேலும் வலியுறுத்ததுகிறார்.

**மாடரேட்டர் Most Rt. Rev.தாமஸ் K.உம்மன்** அவர்கள் அனுப்பிய லெந்து கால அழைப்பைக்குறித்து சபைக்கு அறிவிக்காது சபை மக்களை காப்பாற்றிய எல்லா ஆயர்களையும், பிஷப்மார்களையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

# LIBERAL THEOLOGY- லிபரல் தியாலஜிக்கு ஒரு உதாரணம்:

- **மதுரை டையோசிஸ்ஸில்** ஒரு மைதானத்தில் நடந்த ஒரு பெரும்கூட்டத்தில் பிரசங்கிக்க நான் அழைக்கப்பட்டேன். அந்த கூட்டத்துக்கு தலைமை தாங்கினவர் **மதுரை தமிழ்நாடு இறையியல் கல்லூரியின்** பேராசிரியர் **Dr. ஞானவரம்** அவர்களாகும். மெத்த படித்தவர் பல ஆராய்ச்சி கட்டுரைகளை எழுதியவர். அவர் தன் தலைமை உரையில் கூறும்போது இன்று **மிஷனரி பணி,சுவிசேஷ பணி** என்று வட இந்தியா வரை ஆத்துமாக்களை தேடிப்போகிறார்கள். ஆனால் ஒருவராவது நம் அருகே உள்ள **மரங்களுக்கு தாவரங்களுக்கு** சுவிசேஷம் அறிவித்ததுண்டா? வசன ஆதாரம் இல்லாமல் நான் இதை பேசவில்லை. இயேசு சொன்னார். நீங்கள் புறப்பட்டுபோய் சகல **சிருஷ்டிகளுக்கும்** சுவிசேஷம் அறிவிக்கவேண்டியது நம் எல்லாருடைய கடமையாகும் இப்படி அவர் கூறி ஜெபித்து அமர்ந்துவிட்டார்.

எனக்கோ மிக **தவறான கருத்தை டாக்டர்.ஞானவரம் அவர்கள்** மைதானத்தில் அமர்ந்துள்ள இத்தனை திரளான மக்களுக்குள் **விதைத்துவிட்டாரே என்று என் மனம் சேர்ந்துப்போனது.** தனிப்பட்டமுறையில் இவர் இப்படிப்பட்ட கருத்தை யாரிடமாவது கூறியிருந்தால் நான் தலையிட்டிருக்கமாட்டேன். ஆனால் இத்தனை திரளான மக்கள் இயேசுவின் கட்டளையை தவறாகத்தானே விளங்கிக்கெள்வார்கள். ஆகவேதான் அதை நான் மறுத்து பேசியாக வேண்டுமே என்று தீர்மானித்தேன். அப்படி நான் அவர் கருத்தை மறுத்து பேசினால் அது அவருக்கு அவமானமாக போய்விடுமே என்று மிகவும் தயங்கினேன் என்றாலும் பரவாயில்லை தவறை சரிசெய்தே ஆகவேண்டும் என்று நான் என் பிரசங்கம் ஆரம்பிக்கும்போது இவ்வாறாக கூறினேன்.

தலைமை உரையாற்றிய Dr.ஞானவரம் அவர்களின் கருத்தைப்பற்றி நான் விமர்சிக்கப்போகிறேன். அதற்காக நான் மன்னிப்பு கேட்கமாட்டேன். ஆனால் வருந்துகிறேன் என்று முகவுரை கூறி, ஐயா அவர்கள் **சகல சிருஷ்டி** என்பதை தவறாக விளங்கிக்கெண்டார். அது **மரங்களை** குறிப்பது அல்ல, **செடிகளையோ,மிருகங்களையோ** குறிப்பதும் அல்ல. All Nations என்ற ஆங்கில பதம் சகல தேசத்தார்கள், சகல இனத்தை சேர்ந்தவர்களை குறிக்கும். **மரத்துக்கு,செடிகளுக்கு,மிருகத்துக்கு** உயிர் இருக்கிறது . ஆனால் **ஆத்துமா** இல்லை. **மனித இனத்துக்கு** மட்டுமே **ஆத்துமா உண்டு.** ஆகவே **சுவிசேஷம், மிஷனரி பணி** உலகில் வாழும் **மனிதர்களுக்காக** மட்டுமே என்றேன்.

அதற்கு கூட்டம் முடிந்தபின் **Dr. ஞானவரம்** அவர்களிடம், நானே அருகில் சென்று ஐயா, மன்னிக்கவேண்டும் என்றேன். இல்லை ஐயா **சகல சிருஷ்டி** என்பதற்கு மூல பாஷையில் வேறு ஒரு அர்த்தம் உண்டு என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அனால் நீங்கள் **மறுத்து பேசியது** சரிதான். சுவிசேஷம் **மனிதருக்கு மட்டுமே** என்றார் அவர். அவரின் பெருந்தன்மைக்கு தலைகுனிந்து நன்றி கூறுகிறேன்.

இதுதான் **லிபரல் தியாலஜி** இந்த நவீன தியாலஜி படிப்பில்தான் **மதுரை** அரசரடி **வேதாகம கல்லுாயில்** படித்த **ஆயர்களுக்கு இரட்சிப்பு** இல்லை என்று பரவலாக பேசப்படுகிறது என்பதை அறிவீர்கள்.

## நவீன உபதேசத்திற்கு மற்றொரு உதாரணம் :

ஒருமுறை தமிழ்நாட்டில் ஒரு **ஆயர்** காலை ஆராதனையில் **ஐந்து** அப்பம், **இரண்டு** மீன்களைக்கொண்டு **ஐயாயிரம் பேரை** இயேசு போஷித்தது **இயேசுவின் அற்புதம் இல்லை.** அது **பகிர்ந்து கௌ்ளுதலின்** போதனையாகும் என்று பிரசங்கித்தார். அந்த பிரசங்கத்தை கேட்ட சபை மக்களிடமிருந்து உடனே ஏராளமான கடிதங்கள் எனக்கு வந்தது.

உடனே நான் அந்த ஆயருக்கு அந்த கருத்தை மறுத்து கடிதம் எழுதினேன். அதையே ஜாமக்காரனிலும் வெளியிட்டேன். இப்படி **மதுரை அரசரடியில்** படித்த **ஆயர்களால்தான்** அந்த **மதுரை வேதாகம கல்லூரிக்கு** கெட்ட பெயர் உண்டாகிறது. பெரும்பாலானவர்களின் ஆபிப்ராயப்படி அரசரடியில் **இரட்சிப்பை (மனந்திரும்புதலை)** குறித்து **போதிப்பதில்லை** என்று எழுதினேன். உடனே தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களிலிருந்து மதுரை **அரசடி வேதாகம கல்லூரியை** தாக்கி கல்லூரி முதல்வர் Dr.ஞானாராபின்சன் அவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டது.

அதன்பின் Dr. **ஞான ராபின்சன்** அவரிடமிருந்து கடிதம் ஒன்று எனக்கு வந்தது. அதில் அவர் எழுதியதாவது, **அரசரடியை தாக்கி** பலர் எனக்கு கடிதம் எழுதிவிட்டார்கள். அதற்கான விளக்கத்தை அல்லது பதிலை டாக்டர்.ஞானராபின்சன் ஆகிய நான் எழுதினால் உங்கள் ஜாமக்காரன் பத்திரிகையில் அதை வெளியிடுவீர்களா? என்றார். உடனே ஐயா நான் இப்படிப்பட்ட மறுப்பு கடிதத்தை எப்போதும் வரவேற்பேன். உங்களுடைய போட்டோ(பாஸ்போர்ட் சைஸ்) ஒன்றையும் உங்கள் விளக்க கடிதத்தோடு இணைத்து எனக்கு அனுப்பித்தாருங்கள் என்றேன்.

அப்படியே தன் கல்லூரி லெட்டர் ஹெட்டில் தன் புகைப்படத்தையும் வைத்து தன் மாற்று

கருத்தை எழுதி அனுப்பினார். அதில் அவர் எழுதியது மதுரை அரசரடியில் **இரட்சிப்பை** (மனந்திரும்புதலை) குறித்து **போதிப்பதில்லை** என்று பல வருடங்களாக பலர் குற்றசாட்டை எழுப்பியுள்ளார்கள்.

எங்கள் வேதாகம கல்லூரி, **இரட்சிப்பை சொல்லிகொடுப்பதற்காக** ஏற்பாடு செய்யப்பட்ட தில்லை. நாங்கள் **வேதத்தை** குறித்து மட்டுமே கற்றுக்கொடுக்கிறோம்.

இந்த வேதாகம கல்லூரியில் **குப்பையும்** உண்டு,**மாணிக்கமும்** உண்டு. வேதாகம கல்லூரிக்கு வருகிறவர்கள் **இரட்சிக்கப்பட்டு** மனம்திரும்பியவர்களாக இருந்தால் அவர்கள் குப்பையை விட்டுவிட்டு **மாணிக்கத்தை எடுத்துசெல்வார்கள்.** இங்கு வருகிறவர்களை நாங்கள் தேர்ந்தெடுப்பதில்லை. **டையோசிஸ்** எப்படிப்பட்டவர்களை தெரிந்தெடுத்து சிபாரிசு செய்தும் **ஸ்பான்சர்** செய்தும் அனுப்புகிறார்களோ அவர்களைத்தான் நாங்கள் படிப்பிக்கிறோம் அவ்வளவே!. அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களா ! இல்லையா! என்பதை நாங்கள் பார்ப்பதில்லை. ஆகவே தவறான வியாக்கியானத்தை கூறிய அந்த குறிப்பிட்ட **ஆயரை** அனுப்பிய அந்த டையோசிஸ்தான் பிரச்சனைக்கு காரணம் என்றும் எங்கள் வேதாகம கல்லூரி காரணமாகாது என்று எழுதினார். மேலும் அவர் இப்படிப்பட்ட சிபாரிசின்பேரில் இங்கு வருகிறவர்கள் **தகுதியின்** அடிப்படையில் இங்கு வருவதில்லை என்று பதில் எழுதினார்.

ஆகவே ஒவ்வொரு டையோசிஸ் **பிஷப்மார்,நிர்வாகிகள்** தவறானவர்களை தெரிந்தெடுத்து **ஆயர்** படிப்புக்காக அனுப்பிவிடுகிறதால் இந்த அவமானம் கல்லூரிக்கு ஏற்படுகிறது. குற்றம் TTC அரசரடி வேதாகம கல்லூரி மேல் இல்லை என்றார். அதை அப்படியே அவர் புகைப்படத்தோடு ஜாமக்காரனில் வெளியிட்டேன். எல்லாரும் Dr.ஞான ராபின்சன் அவர்களை புகழ்ந்தார்கள்.

## முதல்வர்.Dr.ஞானராபின்சன் அவர்களின் பதிலும் பிழையானது:

**TTC கல்லூரி முதல்வர் டாக்டர் ஞானாராபின்சன் அவர்கள் தவறை டையோசிஸ் நிர்வாகிகள், தலைவர்கள்மேல்** சுமத்தினாலும் **வேதாகம கல்லூரியின்** மிக முக்கிய பொறுப்பை அவர் விளங்கிக்கொள்ளவில்லை.

வேதாகமத்தை சரியாக போதிக்கும்போது அதில் கண்டிப்பாக **இரட்சிப்பு, மனந்திரும்புதல்** ஆகியவை கட்டயம் வருமே. இயேசு இந்த உலகத்துக்கு வந்ததே அதற்காகதானே. ஆகவே இதன்மூலம் முக்கியமாக அறிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால் வேதாகம கல்லூரியில் உள்ள ஆசிரியர்களும், முதல்வருக்குமே **இரட்சிப்பின் அனுபவம் இல்லை** என்று விளங்குகிறது. அமெரிக்காவில் **ஜான் வெஸ்லி** அவர்கள் ஆரம்பித்த **ஆஸ்பரி தியாலஜிகல் செமினரி** என்ற உலக பிரசித்திபெற்ற கல்லூரியில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகுப்பிலும் அது எந்த விஷயம சம்பந்ததப்பட்ட படிப்பானாலும் அந்த வகுப்பு முடியும்போது ஆல்டர்கால்கொடுப்பதுபோல் படித்த அந்த பகுதியில் ஆத்மீக விஷயத்தை மையமாக்கி ஜெபத்தோடு அந்த வகுப்பை முடிப்பார்கள்.

உலக பிரசித்திபெற்ற ஊழியர்கள் பலர் அந்த கல்லூரியில் பட்டம் பெற்றவர்களே. டாக்டர்

தியோடர் வில்லியம்ஸ், டாக்டர் சாம் கமலேசன் போன்ற பிரபல ஊழியர்களும் அதில் அடங்குவர். அதனால்தான் இவர்கள் பிரசங்கிக்கின்ற சபைகளில் பெரிய உயிர்மீட்சி உண்டானதை நாம் அறிவோம். அந்த குறிப்பிட்ட அமெரிக்க கல்லூரிக்கு அறைகுறை மனந்திரும்புதலோடு ஒரு மாணவர் வந்திருந்தாலும் கல்லூரியில் அவர்கள் கால் வைத்தவுடனே அவர்களுக்காக விசேஷித்த ஆவிக்குறிய கூட்டம் ஏற்பாடு செய்து வெளியிலிருந்து செய்தியாளர்களை வரவழைத்து அவர் பிரசங்கம் மூலம் அந்த மாணவர்கள் அனைவரும் முழு மனந்திருப்புதலை பெற்று தங்களை ஆவிக்குறியவர்களாக பக்குவப்படுத்திக்கொள்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் தங்கள் படிப்பை முடித்து சபைகளில் ஆயர்களாக ஊழியம் செய்வதால் அந்த சபை மக்கள் உயிர்மீட்சி பெறுவார்கள் என்பது உறுதி.

## கடைசியாக மற்றொரு ஒரு உதாரணம்

## பிஷப் ஒருவர் இயேசுவை துப்பாக்கியால் சுடுவேன் என்றார்

இந்தியாவில் பெங்களூர் UTC (United Theology Ceminay) ஆடிட்டோரியத்தில் **உலக பிஷப்மார்**, ஆயர்களின் செமினார் நடந்தது. Dr. ஞானாராபின்சன் அவர்களின் நண்பர் எனக்கு ஒரு அழைப்பிதழை அனுப்பி என்னையும் அக்கூட்டத்தில் **சாதாரண பார்வையாளராக** கலந்துகொள்ள அழைத்தார்.

மேடையில் ஏராளமான பிஷப்மார் பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்தார்கள். அதில் **கருப்பர் இன** நாட்டிலிருந்தது **ஒரு பெண் பிஷப்** ஒருவர் வந்திருந்தார்.


அவர் பேச அழைக்கப்பட்டார் அப்போது அவர் கூறியது **அரங்கத்தையே அதிர்ச்சியடைய வைத்தது**

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்று ஒன்று இருக்குமானால் அந்த வருகையின்போது நான் அதை காண நேரிட்டால் தாமதிக்காமல் உடனே என் கையில் உள்ள துப்பாக்கியால் நான் அந்த இயேசுவை சுட்டுவிடுவேன் என்றார். மேலுர் அவர் இப்படி நான் கூற காரணம் என்னவென்றால்

இயேசு பெண்களுக்கு **சம உரிமை** கொடுக்கவில்லை. அந்த இயேசு கொடுக்காத **பெண் சம உரிமை** என் தாய் நாட்டில் **என் சபைகளின்** மாடரேட்டர் கமிட்டி பெண்ணாகிய என்னை **பிஷப் ஸ்தானத்துக்கு** உயர்த்தி உங்களுக்கு முன் நிறுத்தியிருக்கிறது.

ஆகவே நம் வேதம் பெண்களுக்கு (Gender) **சம உரிமை** அளிப்பதில்லை என்றார். ஆகவேதான் நான் என் வெறுப்பை இங்கு பதிவு செய்கிறேன் என்றார். அருகில் இருந்த மற்ற **பிஷப்மார்** பிடித்துவைத்த **மண் பொம்மைகள்போல்** அவர் கருத்தை எதிர்த்து பேசாமல் அமர்ந்திருந்தனர். அவருக்கு அடுத்ததாக பேசின **பிஷப்பாவது** அந்த **ஆப்பிரிக்க பெண் பிஷப்** பேசியது **தேவ தூஷனம்** அவர் **கிறிஸ்தவ** சபைக்கு பிஷப்பாக தொடர தகுதியில்லாதவர் என்று கூறவில்லை. அங்கு கூடியிருந்த எந்த பிஷப்மாரும் அந்த பெண் பிஷப் கூறிய கருத்தை எதிர்த்து கூற தைரியப்படவில்லை.

# நவீன வேதபடிப்பு (லிபரல் தியாலஜி) மற்றொரு உதாரணம்



**வடக்கு கேரளா** டையோசிஸ்(இப்போது **மலபார்** டையோசிஸ் என்று அழைக்கப்படுகிறது) பிஷப்பாக பணியாற்றி இப்போது அந்த பிஷப் பதவியில் தொடர்ந்து பணியாற்ற முடியாமல் வியாதிபடுக்கையில் இருக்கிறார். அந்த பிஷப்பாகிய **Rt.Rev.KURUVILLA** அவர்கள் பிஷப் ஆவதற்குமுன் **திருவனந்தபுரம் -கண்ணமூலா** செமினெரி கல்லூரி முதல்வராக பணியாற்றினார்.

அப்போது வேதாகம கல்லூரி மாணவர்கள் முதல்வர் அவர்கள் வெளியிட்ட **நவீன உபதேச துண்டுபிரதியை** எனக்கு அனுப்பி இப்படிப்பட்ட உபதேசத்தை முதல்வர்,ஆயர்களுக்கு உபதேசிக்கிறார். நாங்கள் என்ன செய்வது? என்று கேள்வி எழுப்பினார்கள்.

பல மாதங்கள் கழித்து முதல்வர் அவர்கள் **பிஷப்** எலக்ஷனில் தெரிந்தெடுக்கப்பட்டார். தெரிந்தெடுக்கப்பட்ட செய்தியை அவருக்கு முதலில் அறிவித்தவன் நான்தான். அதிகாலை நேரம் சுமார் 6.30 மணிக்கு **திருவனந்தபுரத்தில் உள்ள அந்த** முதல்வர் வீட்டுக்கு சென்றேன். இவர் **கேரளாவில் முண்டகாயம்** என்ற ஊரில் சிஎஸ்ஐ ஆயராக இருந்த சமயம் அங்கு நடந்த என் கன்வென்ஷனில் பல மாதம் வியாதி படுக்கையில் இருந்த இவருடைய **மனைவிக்காக** என்னை ஜெபிக்க சொன்னார். வீட்டில் சென்று ஜெபித்துவிட்டு திரும்பிவிட்டேன். நான்காவது நாள் ஞாயிறு காலை ஆராதனையில் திருவிருந்து ஆரானைக்கு அந்த ஆயர் மனைவி அநேக மாதங்களுக்கு பிறகு அவரே நடந்துவந்து **முழங்கால்** படியிட்டு திருவிருந்து கைக்கொண்டார். கூட்டத்தில் தனக்கு நடந்த அற்புத சுகத்தை சாட்சியாக அவரே அந்த விவரத்தை கூறி ஆண்டவரை மகிமைப்படுத்தினார். அந்த நிகழ்ச்சிக்குபின் அந்த ஆயர் குடும்பம் என்னை மிகவும் நேசித்தனர்.

இப்போது அவர் பிஷப்ஆனவுடன் அவருக்கு வாழ்த்துதல் கூற நேரில் சென்றேன். வாழ்த்துதல் கூற மட்டுமல்ல, அந்த **நவீன உபதேசத்தைப்பற்றி** விசாரிக்கவும் சென்றேன்.

அவர் எழுதியதாவது: **இயேசு சிலுவையில்** அறைப்படும்முன் பேதுரு மறுதலிக்கும்போது **சேவல் மூன்று முறை** கூவும் என்று இயேசுகிறிஸ்து கூறியது **தவறு** என்றும் அது **சேவல்** கூவிய **சப்தம் அல்ல.** அன்றைய **ரோம போர் சேவகர்கள்** தங்கள் **எக்காள கருவி** மூலம் உண்டாக்கிய சப்தம் ஆகும். அது **சேவலின் சப்தம் அல்ல** என்று எழுதியிருந்தார்.

நான் முதல்வர் வீட்டில் ஆயரை சந்தித்து ஐயா, நீங்கள் எழுதிய அந்த ஆராய்ச்சி கட்டுரை தவறானது. அது ஆபத்தானது. **ஆண்டவரின் வார்த்தையையே பொய்யாக்கும் கட்டுரையாகும்.** நீங்கள் **பிஷப் பதவி பொறுப்பு** எடுத்தவுடன் தயவுசெய்து இந்த கட்டுரை விவரத்தை சபை மக்களுக்கு போதிக்கவேண்டாம் என்பதை அறிவிக்கவே நான் நேரில் வந்தேன் என்றேன்.

(முதல்வரும்) ஆயரும், மனைவியும் என்முன் முழங்கால் படியிட்டு பிஷப் பதவி ஏற்கும்

முன் நீங்கள் என்னை ஜெபித்து ஆசீர்வதிக்க வேண்டும். பிஷப் கான்சிகிரேஷன்(அபிஷேகம்) சமயம் நீங்களும் அங்கு இருக்வேண்டும் என்றெல்லாம் அன்போடு அழைப்பு கொடுத்தவர். அவரின் அந்த **தவறான உபதேசத்தைப்பற்றி** கூறியவுடன் அதை அவர் **கௌரவ பிரச்சனையாக** எடுத்துக்கொண்டு என் காரின் அருகே வந்து டாக்டர், **நீங்கள் கூறிய ஆலோசனையை** கைக்கொள்ள என்னால் இயலாது. பல மாதங்கள் பல **ரோம சரித்திர புத்தகங்களை கஷ்டப்பட்டு ஆராய்ச்சி செய்து நான்** உறுதிப்படுத்திய என் கருத்தை **நான் மாற்றிக்கொள்ள விரும்பவில்லை** என்றார்.

அதிலிருந்து அவருக்கு **என்மேல் வெறுப்பு** உண்டானது. மேலும் அவர் பிஷப் ஆனதால் அந்த பதவிக்குரிய பெருமை அவருக்குள் உருவானது. மலபாரில் நடந்த **என் கூட்டங்களில்** எதிலும் என் கூட்டத்துக்கு தலைமை தாங்க அவர் விரும்பவில்லை என்று அறிந்தேன்.

நான் என் ஜாமக்காரனில் பிஷப் அவர்கள் எழுதிய அந்த **நவீன உபதேசம் பிழையானது.** அது **சேவல்** கூவிய சப்தம் இல்லை என்றால் **இயேசு ஏன் பேதுருவிடம் சேவல் கூவுவதற்குமுன் மூன்றுமுறை என்னை மறுதலிப்பாய் என்று முன் எச்சரிக்கையாக கூறவேண்டும்?.**

இது **இயேசுகிறிஸ்துவின் அந்த தீர்க்கதரிசன வார்த்தையை பொய்** என்று நிருபிக்க இந்த **பிஷப்** முயலுகிறார் என்று எழுதினேன்.

இப்படி ஜாமக்காரனில் நான் எழுதினால் **எந்த பிஷப்பும் என்னை வெறுக்கத்தான்** செய்வார்கள். அந்த எதிர்ப்புகளையும் எதிர்ப்பார்த்தான நம் **சிஎஸ்ஐ சபை மக்களையும், ஒரு சில ஆயர்களையும், அப்படிப்பட்ட தவறான உபதேசத்திலிருந்து காப்பாற்றவும் எச்சரிக்கைப்படுத்தவும் ஜாமக்காரனில் எழுதி வருகிறேன்.** இது குற்றம் சொல்லும் ஆவி அல்ல. மேலும் இது **பிஷப்மாரை அவமானப்படுத்தும் நோக்கமும்** அல்ல என்பதை ஜாமக்காரன் வாசகர்கள் விளங்கிக்கொண்டால்போதும்.

## மற்றொரு சம்பவம்

இந்தியாவில் கேரளா மாநிலத்தில் **மார்தோமா** என்ற சபை உண்டு. அந்த சபைத்தான் என்னை 1969ல் முதல்முதல் கேராளாவில் கன்வென்ஷன் பிரசங்கியாக அறிமுகப்படுத்தியது.

அவர்களுக்கு **சபா தாரகை** என்ற மாதப் பத்திரிகை உண்டு. அதில் ஒரு ஆயர் எழுதிய கட்டுரையில் 6000 பிசாசுகள் அடங்கிய **லேகியோன்** என்பவன் **பிசாசு பிடித்தவன்** அல்ல. அவன் **மனநோய்** வியாதி பிடித்தவன் என்று ஒரு கட்டுரையை எழுதினார். உடனே நான் அதை மறுத்து ஜாமக்காரனில் விமர்சனம் எழுதினேன். ஒரு நல்ல சபையை கெடுப்பது இப்படிப்பட்ட(ஆயர்கள்) அச்சன்மார்கள்தான். ஏற்கனவே **விசுவாசத்தில் குன்றிபோன** ஜனங்களை இப்படிப்பட்ட கட்டுரைகள் இயேசுவைபற்றி கூடுதல் சந்தேகப்பட வைப்பதாகும் என்று எழுதினேன். ஏராளமான **மார்தோமா சபை ஆயர்கள்** நான் எழுதியதை புகழ்ந்து எனக்கு பதில் எழுதினார்கள். Rev.**குருடாமன்னில்** என்ற சீனியர் ஆயர் அவர்களுடன் 3 ஆயர்கள் சேர்ந்து அந்த குறிப்பிட்ட பத்திரிகையின் Editor பதவியில் இருந்த பிஷப் **ஐரேனியஸ்** அவர்களிடம் புகார் செய்தனர். அந்த ஆயர் பத்திரிகையில் எழுதியது தவறான கருத்து என்பதைக்குறித்து நாங்கள் எழுதும் மறுப்பு விளக்கத்தையும், கட்டுரையும் அதே **சபா தாரகை**

**பத்திரிக்கையில்** வெளியிட வேண்டும் என்றார்கள். ஆனால் எடிட்டர் பிஷப் அவர்கள் மறுத்துவிட்டார். காரணம், அவரும் இரட்சிக்கப்படாதவரும், பல பாவ பிரச்சனைகளில் அகப்பட்டவருமாயிருந்தார். ஆகவே ஆயர்கள் குறிப்பிட்ட ஆவிக்குறியக்கருத்தை அவர் ஏற்றுக்கொள்ளவிரும்பவில்லை. ஆனால் அப்படிப்பட்ட ஆவிக்குறிய ஜீவியம் இல்லாத அந்த பிஷப்தான் இன்று அந்த மார்தோமா சபைகளுக்கு தலைமை மாடரேட்டராக (மெத்ரோபோலித்தனாக) இருக்கிறார்.

இதுதான் **லிபரல் தியாலஜி** உபதேசம். இப்படிப்பட்ட தவறான உபதேசம் கொண்டவர்கள்தான் இன்று **லூத்தரன்** சபைகளிலும் CSI **மார்தோமா** சபைகளிலும் பெரும்பாலானவர்கள் ஆயர்களாக இருக்கிறார்கள் ஆகவே திருச்சபை மக்கள் வசனத்தில் வளர முடியாமல் ஆவிக்குரிய ஆகாரத்துக்காக வேறு சபைக்கு சபைமக்கள் ஓடுகிறார்கள்.

**எல்லா தெய்வமும் ஒன்று - எல்லா மதமும் ஒன்று** என்ற கொள்கையை மேலே வாசித்த நான் குறிப்பிட்ட 3 சம்பவங்கள் 3 பிஷப்மார்கள் காலத்தில் மட்டுமல்ல, 1947ம் ஆண்டு சிஎஸ்ஐ உருவாக்கப்பட்ட காலம்முதலே ஒவ்வொரு கால கட்டத்தில் சிஎஸ்ஐக்கும் நுழைக்க பெரு முயற்சிகள் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமாக முயற்சிகள் தொடர்ந்துக்கொண்டேயிருப்பதால் மறுபடியும் கடவுள் குடும்பம் என்ற பெயரிலும், இயற்கை தாவரங்களும் சுவிசேஷம் என்ற முட்டாள்தனமாக கொள்கை மூலமாக சபை மக்களை **இயேசுவே வழி,சத்தியம்,வாசல்** என்ற பரிசுத்த கொள்கையிலிருந்து சிஎஸ்ஐ சபை விசுவாசிகளை பிரித்துக்கொண்டு போகும் அபாயம் வளர்ந்துக் கொண்டுபோகிறதே என்ற பயத்தினாலும், பாரத்தினாலும் இம்முறை ஜாமக்காரனில் இந்த குறிப்பிட்ட விஷயத்துக்காக அதிக பக்கங்களை ஒதுக்கியிருக்கிறேன். வாசகர்கள் ஒன்று சேர்ந்து ஜெபித்து நம் சந்ததியை காப்பாற்றுவோம்.

## சிஎஸ்ஐ,லூத்தரன்,மார்தோமா சபை ஆயர்களின் மறுபக்கம்:

இதுவரை **நவீன உபதேசத்தில்** அகப்பட்ட ஆயர்கள், பிஷப்மார்கள்,வேதாகம கல்லூரிகள் பற்றியும் அதனால் சபைகள் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேற இயலவில்லை என்பதைப்பற்றியும் எழுதினேன். **லிபரல் தியாலாஜி** கல்லூரியில் குறிப்பாக UTC(Bangalore),TTC(Madurai), Sharambur(Calcutta) யுனிவர்சிட்டியில் படித்த பெரும்பாலான **ஆயர்களும்,பிஷப்மாரும்** இரட்சிப்பின் அனுபவம் பெறாதவர்கள். அந்த குறிப்பிட்ட வேதாகம கல்லூரியில் இரட்சிப்பை சொல்லி தருவதில்லை. அங்கு படித்த ஆயர்களுக்கும் இரட்சிப்பில்லை என்று எழுதினேன்.

ஆனால் அதே சமயம் இந்த குறிப்பிட்ட **லிபரல் தியாலாஜி** வேதாகம கல்லூரிகளில் படித்த ஆயர்மார்கள் பலர் **இரட்சிக்கப்பட்ட ஆயர்களாகவும்** சாட்சி உள்ளவர்களாகவும் இருப்பதை நான் அறிவேன்.

**மதுரை அரசரடியில்** உள்ள TTCயில் படித்து **நவீன உபதேசத்தை (லிபரல் தியாலாஜி)** கைக்கொண்ட மற்ற **ஆயர்களை** போலல்லாமல் அதே கல்லூரிகளில் படித்த நல்ல ஆயர்களைப்பற்றியும், பிஷப்மார்களைப்பற்றியும் நான் எழுத வேண்டியது அவசியம் அல்லவா!.

UTC & TTC மதுரை அரசரடியில் படித்த ஆயர்களிலும் சிலர் தாங்கள் படித்த நவீன உபதேசத்தால் கறைப்படியாத ஆயர்கள் சிலரைப்பற்றி ஏற்கனவே ஜாமக்காரனில் எழுதினேன்.

பல ஆண்டுகளுக்குமுன் **CSI கோயமுத்தூர் டையோசிஸ்ஸில்** ஒரு ஆயரை அறிவேன். அவர் ஊழியம் செய்த சபைகளில்ஒன்று இரண்டாக உடைந்து அதே ஊரில் **இரண்டு இடங்களில்** ஆராதனை நடந்துக்கொண்டிருந்தது. ஒரு ஆராதனை **பள்ளிக்கூடத்தில் நடக்கிறது.** மற்றொரு ஆராதனை **சபை ஆலயத்தில்** நடந்துக்கொண்டிருந்தது.

குறிப்பிட்ட ஆயரை மதுரை அரசரடியில் (TTCயில்) படித்தவர். அவரை அந்த பிரச்சனையுள்ள (இரண்டாக உடைந்த) சபைக்கு பிஷப் அவர்கள் அவரை மாற்றல் செய்தார்கள்.

ஆயர் வாலிபனாக இருந்தாலும் ஜெபிப்பவராகவும் இருந்ததால் முதலில் பள்ளிக்கூடத்தில் நடக்கும் ஆராதனையில் கலந்துகொள்ளும் சபை மக்களை அவரவர் வீட்டுக்கு தனியாக சந்தித்து பேசினார். நாளை உங்கள் பிள்ளைகள் திருமணம், மெடிக்கல் காலேஜி ஸ்பான்சரிங், டையோசிஸ் இன்ஜினியரிங் காலேஜில் சேர அங்கீகரிக்கப்பட்ட சிஎஸ்ஐ சபை ஆயர்களின், பிஷப்மாரின் சிபாரிசு கடிதம் தேவைப்படும். அப்படிப்ட்ட சூழ்நிலையில் எங்கு போவீர்கள்.

பல வருடங்களுக்கு முன் ஊழியம் செய்த ஆயருக்கும் உங்களுக்கும் பிரச்சனை அதனால் நீங்கள் பிரிந்து தனி ஆராதனை நடத்துகிறீர்கள்.

இப்போது நான் புது ஆயராக வந்திருக்கிறேன். பழைய பகையெல்லாம் மறந்து ஆலய ஆராதனையில் கலந்துகொள்ளுங்கள் என்றார். சில வாரங்களிலேயே ஒரு குடும்பத்தை தவிர பிரிந்துபோன அத்தனை சபை மக்களும் மறுபடியும் ஆலய ஆராதனையில் பங்கு கொண்டார்கள். ஆயரின் நடவடிக்கைகள் எல்லாருக்கும் பிடித்துக்கொண்டது. அத்தனைபேரும் ஆயரும் சேர்ந்து அந்த சிறிய ஆலயத்தை இடித்து காண்ட்ராக்டர் வசம் விடாமல் கூலியாட்களை ஏற்பாடு செய்யாமல் சபை மக்களே அவர்களுக்குள் பேசி பத்து பத்து பேராக மனல் எடுத்து உதவவும், இரண்டு மேஸ்திரிகளை மட்டும் வைத்து ஆயரும் தலையில் தலைப்பா கட்டிக்கொண்டு மணல் சிமெண்ட் எடுத்துக் கொடுக்கும் பணியை செய்து ஆலயத்தை பிரம்மாண்டமாக கட்டி முடித்தனர்.

❖ அதே ஆயர் சேலத்தில் உள்ள சபைக்கு மாற்றப்பட்டார். அப்போது அந்த சபை பல வருடங்களாக பிரச்சனையும் கோர்ட் கேஸ்சுமாக கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தனர்.

அந்த சபையினர் எந்த ஆயரையும் ஒரு வருடத்துக்குமேல் ஊழியம்செய்ய விடாமல் ஆயர்களை அழவைத்து அனுப்புவார்கள்.

இந்த வாலிப வயது ஆயர் தன் சாட்சியாலும் தன் பிரசங்க தாலந்தாலும் மக்களின் அன்பை சம்பாதித்தார். 8 கோர்ட் கேஸ்களை வாபஸ் வாங்க வைத்தார். மிஷனரிகளை தாங்கும் சபையாக அந்த சபையை மாற்றினார். இப்படி லிபரல் தியாலஜி வேதாகம கல்லூரியில் படித்த இந்த ஆயருக்கு இரட்சிப்பின் அனுபவம் இருந்ததால்தான் படித்த லிபரல் தியாலஜி செய்திகளை ஆலயத்தில் உபதேசிக்காமல் நல்ல ஆவிக்குறிய செய்திகளை பிரசங்கித்ததாலும் எல்லா பிரசங்கத்திலும் தன் வாழ்க்கையின் சாட்சி அனுபவங்களை இணைத்து பிரசங்கித்தாதல் இந்த சபையிலிருந்து பிரிந்துபோன பல குடும்பங்கள் தானாக சிஎஸ்ஐ சபைக்கு வந்து சேர்ந்தது.

# திருநெல்வேலி டையோசிஸ்

❖ ஒரு ஆயர் அவரும் மதுரை அரசரடியில் படித்தவர்தான். தான் ஊழியம் செய்யும் சபைகளில் எந்த எலக்ஷன் நடந்தாலும் அடிதடி கலாட்டா நடக்கும் சபையானாலும் கமிட்டி நடக்கும் இரண்டு நாட்களுக்குமுன் கமிட்டி நடக்கும் இடத்தில் கமிட்டியினர் உட்காரும் இடத்தில் **முழங்கால் படியிட்டு** கமிட்டி பிரச்சனையில்லாமல் நடக்க வேண்டும் என்று உபவாசித்து ஜெபிப்பார்.

**டாக்டர்.புஷ்பராஜாகிய** எனக்கும் கமிட்டி நடக்கும் தேதியை குறிப்பிட்டு கடிதம் எழுதுவார். நானும் ஜெபிப்பேன். கமிட்டி முடிந்தவுடன் மறுபடியும் எனக்கு கடிதம் எழுதுவார். டாக்டர். எங்கள் சபை கமிட்டி மிகவும் சமாதானமாக நடந்தது. யார் தேவையில்லாமல் பிரச்சனையை கிளப்புவார்கள். சண்டைபோடுவார்கள் என்று பயந்திருந்தேனோ அந்த குறிப்பிட்ட இரண்டு பேர்களின் வாயை கர்த்தர் அன்று சிங்கத்தின் வாயை கட்டியதுபோல இவர்கள் வாயையும் கட்டிப்போட்டார். மீட்டிங் முடியும்வரை எல்லாரும் பேசினார்கள். அந்த குறிப்பிட்ட இருவர்மட்டும் அன்று ஒரு வார்த்தையும் சத்தமாகவோ இருமாப்புடனோ பேசாமல் எல்லா தீர்மானங்களும் அமைதியாக ஏனமனதாக நிறைவேற்ற ஒத்துழைத்தனர். நீங்கள் ஜெபித்தற்கு நன்றி என்று எனக்கு கடிதம் எழுதி அறிவிப்பார். இப்படியும் அரசரடியில் **படித்த பல ஆயர்கள் ஜெபத்தின் வழியாக** சபையை சமாதானத்துடன் நடத்தினார்கள்.

❖ இதே போல் கேரளாவிலும், ஆந்திராவிலும். கர்னாடகாவிலும் பல ஆயர்கள் சபை **அரசியலில்** பிஷப் எலக்ஷனில் தீவிரமாக தலையிடாமல் அப்படிப்பட்ட காரியங்களுக்கு முன்னுக்கு நிற்காமல் விலகியே இருந்தார்கள். சபையில் நிர்வாகிகளின் தவறுக்கு இந்த ஆயர்கள் துணைபோகாமல், சபையில் இரு கட்சிகள் இருந்தாலும் அவர்களில் ஒருவர் பக்கமாகவும் சாயாமல், நடுநிலை வகித்து சபையை சுமுகமாக நடத்தி சென்ற ஆயர்களும் உண்டு.

❖ **அனைத்து சிஎஸ்ஐ சபை மக்களுக்கும்** கடைசியாக நான் கூறவிரும்புவது என்னவென்றால். சிஎஸ்ஐ சபையில் உள்ளே நுழைய இருக்கும் மேலே வாசித்த பலவிதமான **நவீன உபதேச செய்திகள்** விஷயத்தில் ஜாக்கிறதையாக இருங்கள்.

அப்படிப்பட்ட நவீன செய்திகள் சொல்லுவது யாராக இருந்தாலும் அது ஆயராக அல்லது பிஷப்பாக அல்லது மாடரேட்டராக இருந்தாலும் சரி. சபை மக்கள் அதற்கு செவி சாய்க்காமல் தங்கள் ஆத்துமாவை அவரவர்கள் ஜாக்கிதையாக பார்த்துக்கொள்ளவேண்டியது உங்களுடைய பொறுப்பு ஆகும். **மாடரேட்டர், பிஷப்,ஆயர் அல்லது டாக்டர்.புஷ்பராஜ்** சொன்னதால் நான் வசனத்தைவிட்டு விலக நேரிட்டது என்று சாக்குபோக்குகள் சொன்னால் நியாய தீர்ப்பில் அது எடுபடாது. **அவரவர் ஆத்துமாவுக்கு** அவரவர்கள்தான் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

கர்த்தர் அவரவர் பாஷையில் வேத புத்தகத்தை கிருபையாக எழுதி கொடுத்துவிட்டார். தினசரி நீங்கள் அதை ஒழுங்காக வாசித்து,தியானித்து உபதேசம் சொல்லுகிறவர்களின் கருத்துக்கள் **நம் வேத வசனத்தோடு ஒத்துப்போகிறதா** என்பதை ஒப்பிட்டு பார்த்து நம் ஆவிக்குரிய ஜீவியத்தை வளர்த்த முயற்சி செய்வோம்.

நாளை **நியாய தீர்ப்பு** சமயத்தில் **பெந்தேகோஸ்தே உபதேச சட்ட புத்தகமோ, லூத்தரன், சிஎஸ்ஐ கான்சிடிடியூஷனோ(சட்டமோ) வைத்து கர்த்தர் நியாயம் தீர்க்கமாட்டார்.** நம் கையில் உள்ள வேத வசனத்தை மையமாக வைத்துதான் நியாயதீர்ப்பு செய்வார். வசனத்தின்படி சபையை நடத்தினாயா?வசனத்தின்படி ஜீவித்தாயா? என்றுதான் கர்த்தர் கேட்பார். அவரவர் ஆத்துமாவுக்கு அவரவர்தான் பொறுப்பு. சபையோ, டையோசிஸ்ஸோ பொறுப்பு அல்ல.

நம் **மெயின் லைன்** சபைகளில் எல்லா காலத்திலும், எல்லா சபைக்கும் நல்ல ஜெபிக்கும் இரட்சிக்கப்பட்ட ஆயர்மார் கிடைக்கமாட்டார்கள். அதை காரணமாக்கி நாம் சபையைவிட்டுவெளியேற முயலக்கூடாது. இந்த உலகில் உபதேசத்தில் பூரணப்பட்ட சபை ஒன்றுகூட இல்லை. **நூற்றுக்குநூறு சரியான** உபதேசத்தில் **சபையை நடத்துகிறோம்** என்று யாராலும் கூறமுடியாது. உபதேச விஷயத்தில் ஏதாவது ஒரு குறை நிச்சயம் எல்லா சபைகளிலும் உண்டு.

அப்படியே பிஷப் அல்லது மாடரேட்டர் சரியான ஆவிக்குரியவர்களாக எப்போதும் நம் டையோசிஸ்க்கு அமைவதில்லை. ஒரு காலத்தில் ஜெபிக்கிற பிஷப்,மாடரேட்டர் - சாட்சியுடன் ஜீவித்தவர்கள் இருந்தார்கள். இப்போதும் ஒரு **சில டையோசிஸ்களில் ஆவிக்குரிய இரட்சிக்கப்பட்ட பிஷப்மார்கள் இருக்கிறார்கள்.**

**கேரளாவில் ஆவிக்குரிய பிஷப்மார்களாக மார்தோமா சபையிலும், யாக்கோபையா** என்ற கத்தோலிக்க உபதேசம் கொண்ட சபையிலும் பிஷப்மார் இருந்தார்கள். அவர்களிடம் சென்று ஜெபிக்க வியாதியஸ்தர்கள்,குடும்ப பிரச்சனை உள்ளவர்கள் பல்வேறு இடங்களிலிருந்து வருவார்கள். அவர்கள் சுகம் பெற்றார்கள். ஆறுதல் அடைந்தார்கள். அப்படி கர்த்தரால் உபயோகப்படுத்தப்பட்ட பிஷப்மார்கள் இப்போது பல வருடங்களாக நான் அறியவில்லை.

அப்படியே **ஜெபிக்கும் ஆயர்கள்** இருந்தார்கள். கேரளத்தில் சிஎஸ்ஐ தெற்கு கேரளாவில், மத்திய கேரளாவில், மார்தோமா சபையில் இரண்டு ஆயர்கள் இப்போதும் இருக்கிறார்கள். மக்கள் அந்த ஆயர்களை எந்த சபைக்கு மாற்றலில் சென்றாலும் அந்த ஊருக்கே சென்று ஜெபிக்கவும் ஆலோசனை பெறவும் அவர்களிடம் செல்வார்கள்.

ஒரு சபையின் **ஆயர் நினைத்தால் சபையை இரண்டாக உடைக்கவும் முடியும்.** பிரிந்த சபை மக்களை தேடி சென்று சபையில் சேர்த்து சபையை வளர்த்தவும் முடியும்.

ரோம 13:1-5ல் எழுதியபடி **அதிகாரங்கள் யாவும் கர்த்தரால் அனுமதிக்கப்பட்டதாகும்.** மோசமான **பிஷப்போ, மாடரேட்டரோ** திருமண்டலத்துக்கு அமைந்துவிட்டால் அது பிசாசால் உண்டானது என்று கூறாமல் **கர்த்தரால் அனுமதிக்கப்பட்டவர்கள்** என்று கூறி அவர்களுக்காக ஜெபிக்க வேதம் கட்டளையிடுகிறது.

அவர்கள் மோசமானவர்களும்,நவீன உபதேசம் போதிப்பவரும், **துர்குணம் நிறைந்தவரும்,லஞ்சம் வாங்குபவருமாக இருந்தாலும் அவர்கள் தெய்வத்தால் அனுமதிக்கப்பட்டவர்கள்** என்றுதான் சபைமக்கள் அவர்களை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**பார்வோன் இருதயத்தை** கடினப்படுத்தியது கர்த்தர்தானே!. அதுபோல மோசமான தலைமை அமைந்துவிட்டதானால் அதை தாங்கி அல்லது சகித்துதான் தீரவேண்டும். **யோசேப்பு** அறியாத வேறொரு பார்வோன் ஆட்சி செய்தான் என்று எழுதியிருப்பதுபோல நாம் இப்படிப்பட்ட பிழையான தலைமையினால் இன்னும் மூன்று வருடமோ, 5 வருடமோ, 10 வருடமோ பிரச்சனைகளை அனுபவித்து தான்தீரவேண்டும்.

டாக்டர்.புஷ்பராஜ் ஆகிய என்னை சிஎஸ்ஐ சபையிலிருந்து வெளியே தள்ளவேண்டும் (Excommicate)செய்ய பல வருடங்களாக திட்டமிட்டார்கள். எப்படியோ என் காலங்கள் நகர்ந்தன. என் ஊழியமும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. இப்போதுள்ள சிஎஸ்ஐ மாடரேட்டர் அவர்கள் நான் பிஷப்மாரின் ஊழல்களை தவறான உபதேசங்களை ஜாமக்காரனில் அறிவித்ததால் 24 டையோசிஸ்களிலும் **என் ஊழியத்தை தடைசெய்ய** பலவித முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். என் 52 வருட ஊழியத்தில் எனக்கு எதிராக வக்கீல் **நோட்டீஸ் அனுப்பி** என்னை கோர்ட்டில் நிற்கவைக்க முயன்றவர்கள் இரண்டுபேர் ஒருவர் பல நூறு ஆவிக்குரிய புத்தகங்கள் எழுதிய **சகோ.சாம் ஜெபதுரை** அவர்கள், அடுத்ததாக பிஷப்மாரில் இப்போதைய சிஎஸ்ஐ மாடரேட்டரும், மத்திய கேரளா சிஎஸ்ஐ டையோசிஸ் பிஷப்புமான **Most.Rt.Rev.தாமஸ் கே.உம்மன்** அவர்களாகும்.

நான் எந்த வக்கீலையும் வைக்காமலே நானே வக்கீல் நோட்டீஸ் அனுப்பிய வக்கீலுக்கும் பதில் கொடுத்தேன். வக்கீல் நோட்டீஸ் அனுப்பிய சிஎஸ்ஐ மாடரேட்டருக்கும் நானே பதில் கொடுத்தேன். அதன்பின் அவர்கள் அமைதியானார்கள். ஆனால் தொடர்ந்து என்னை சிஎஸ்ஐயிலிருந்து நீக்க பெரும் முயற்சிகளை இப்போதும் பலர் முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

இந்தமுறை இந்த **ஆகஸ்ட் ஜாமக்காரனில் எழுதப்பட்ட நமது சிஎஸ்ஐ மாடரேட்டரின் ஆபத்தான நவீன உபதேசத்தையும்,** அந்த உபதேசத்தைக்குறித்து நான் எழுதிய வேதவசன விளக்கத்தையும் குறித்து கடந்த ஜீலை மாத மலையாள ஜாமக்காரனில் வெளியிட்டேன். இப்போது என் விளக்கங்கள் கேரளத்தில் புகைந்துக்கொண்டிருக்கிறது. இப்போது தமிழில் ஆகஸ்ட் ஜாமக்காரனில் அதே விஷயத்தை வெளியிடுகிறேன்.

நான் எழுதிய சிஎஸ்ஐ மாடரேட்டரின் அறிக்கைக்குறித்த விமர்சனதைக்குறித்தோ, சிஎஸ்ஐயில் புகுத்த நினைத்த நவீன உபதேசத்தைக்குறித்தோ, இதை வாசிக்கும் ஆயர்களோ, பிஷப்மாரோ தங்கள் விமர்சனங்களை ஆதரித்தும் - எதிர்த்தும் எனக்கு எழுதலாம். உங்கள் விளக்கங்களை எனக்கு எழுதலாம். நான் அதை வரவேற்கிறேன்.

❖ நான் இதுவரை ஜாமக்காரனில் எழுதியதில் **பொய்யான தகவல்கள்** அல்லது **தவறான** உபதேசங்கள் என் கட்டுரையில் நீங்கள் வாசித்து அறிந்திருந்தால் அல்லது என் **தனிப்பட்ட வாழ்க்கையிலோ, பணவிஷயத்திலோ உண்மையில்லாதவனாக,பாலியல் விஷயத்தில் பாவ தொடர்புகள்** எனக்கு எங்காவது உண்டென்று நீங்கள் யாராவது அறிந்தால் அல்லது ஊழியத்துக்கு சென்ற ஊர்களில், (இந்தியா அல்லது வெளிநாடுகளில்) என்னில் பாவ செயல்கள் இருந்ததாக நீங்கள் யாராவது கேள்விப்பட்டிருந்தாலும் சரி, அறிந்திருந்தாலும் சரி. நீங்கள் தயக்கமில்லாமல் வெளிப்படையாக எனக்கு எழுதலாம். நான் அதை அப்படியே **எடிட் செய்யாமல்**

அதாவது எதையும் மறைக்காமல் அப்படியே அனைத்து பாஷையில் வெளிவரும் **ஜாமக்காரனிலும் வெப்சைட்டிலும்** வெளியிடுவேன்.

நான் ஜாமக்காரனில் எழுதியதில் வேத வசனத்துக்கு விரோதமாக செய்திகள் இருந்ததாக நீங்கள் கருதினால் எனக்கு மாதமாதம் பணம் அனுப்பி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கி கொண்டிருந்தவர்கள் இனி எனக்கு பணம் அனுப்பவேண்டாம். என்று கேட்டுக்கொள்கிறேன்.

என் பத்திரிக்கை(ஜாமக்காரன்) உங்கள் ஆத்தும வளர்ச்சிக்கு தடையாக இருப்பதாக உணர்ந்தால் உங்களுக்கு அனுப்பப்படும் ஜாமக்காரனில் உங்கள் முகவரிமேல்(X) பெருக்கல் குறியிட்ட படத்தில் கண்டபடி கவரில் உள்ள **உங்கள் விலாசத்தை இரண்டு கோடிட்டு அடித்து** அப்படியே ஸ்டாம்ப் ஒட்டாமல் தபால் பெட்டியில் போட்டுவிட்டால் உங்களுக்கு அனுப்பப்பட்ட என் பத்திரிக்கை எனக்கே திரும்பி வந்துவிடும். உடனே என் அலுவலகத்தில் உள்ளவர்கள் விலாச பட்டியலிலிருந்து உங்கள் விலாசத்தை நீக்கி இவ்விதமாய் உங்களுக்கு உதவ காத்திருக்கிறோம்.

**கடைசி காலம் - வருகை மிக நெருங்கிக்கொண்டிருக்கிறது. யாரும் உங்களை வஞ்சிக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள்.**

# பிஷப்மார்களுக்கு - மாடரேட்டருக்கு ஆலோசனை:

**1பேதுரு 5:2-4 உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை(திருமண்டல மக்களை) நீங்கள் மேய்த்து கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாய் அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல.....**

**(உங்கள் பதவி)சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல மந்தைக்கு (திருமண்டல - சபை மக்கள்)மாதிரிகளாகவும் கண்காணிப்பு செய்யுங்கள்.**

அப்படி (வசனத்தின்படி)செய்தால்

**பிரதான மேய்ப்பன்(இயேசுகிறிஸ்து) வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப்(நீங்கள்) பெறுவீர்கள்.**

❖ **ஜாமக்காரனாகிய** நான் கர்த்தர் என்னிடம் கொடுத்த **பத்திரிக்கை ஊழியம்** மூலமாக எதை எதை எழுத பரிசுத்த ஆவியானவர் உணர்த்தினாரோ அவைகளை குற்றமற்ற மனசாட்சியுடன் நிறைவேற்றினேன், இப்போதும் நிறைவேற்றிகொண்டிருக்கிறேன்.

அதற்கு எனக்கு பக்கபலமாக இருந்த என் **அருமை வாசகர்கள், ஊழியர்கள், பாஸ்டர்கள், ஆயர்கள்,** ஒரு சில பிஷப்மார்கள் யாவருக்கும் நன்றி கூறுகிறேன்.

தொடர்ந்து பத்திரிக்கை ஊழியத்தை நிறுத்தாதபடி அதை தொடர்ந்து செய்ய காணிக்கை அனுப்பிக் கொண்டிருக்கிறவர்களுக்கும், என் பெயர் சொல்லி தங்கள் ஜெபங்களில் என்னை தாங்கும் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

**பெரும்பாலான பிஷப்மார்,ஸ்டார் ஊழியர்கள், பாஸ்டர்கள் மற்ற சபை விசுவாசிகள்** அத்தனை பேர்களின் வெறுப்பை நான் சம்பாதித்தாலும் - என்னை வெருக்காத என் கர்த்தரின் பிரசன்னம் என்னோடும், எனக்குள்ளும் எப்போதும் இருப்பதால் **பெரிய நிம்மதியும், சமாதானமும் உள்ளத்தில் எப்போதும் நிறைந்திருப்பதை உணருவதால்தான்** இத்தனை எதிர்ப்பின் மத்தியிலும் என்னால் **தொடர்ந்து ஊழியம்** செய்யமுடிகிறது.

**இயேசு கூறினார்: பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்,**

**நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைகளைச்**

**செய்துமுடித்தேன்.** (யோ 17:4).

ஜெபம்: **என் தெய்வமே!, என் சிறுவயது முதல் எனக்குப்போதித்து வந்தீர். இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை(வசனங்களை) அறிவித்துவந்தேன். இப்போதும் என் தெய்வமே!, இந்த சந்ததிக்கு உமது வல்லமையையும் வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும், நான் அறிவிக்குமளவும் முதிர்வயதும், நரைமயிரும் உள்ளவனாகும் வரைக்கும் என்னை கைவிடீராக. சங் 71:17,18. ஆமென்.** ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## E-mail

ஜாமக்காரன் கடந்த மாதம் வரவில்லை என்று சிலர் ஒவ்வொரு மாதமும் எனக்கு எழுதியிருக்கிறார்கள். நீங்கள் எழுதும் இ-மெயில் அல்லது கடிதத்தில் உங்கள் **பழைய விலாசத்தையும்** உங்களுக்கு **கொடுக்கப்பட்ட நம்பரையும், தொலைபேசி எண்ணையும்** எழுதினால் உங்கள் விலாசத்தை லட்சக்கணக்கான விலாச பட்டியலில் தேடும் நிலை ஏற்படாது. ஆகவே இனி எழுதுபவர்கள் எத்தனை முறை எனக்கு பழக்கமானவர்களாக இருந்தாலும் உங்கள் முழுவிலாசத்தையும் ஜாமக்காரனாகிய நான் மனதில் வைத்துக் கொள்ளமுடியாது. ஆகவே உங்கள் பழைய விலாசத்தையும்,புது விலாசத்தையும் தெளிவாக குறிப்பிடுங்கள். இந்த விஷயத்தில் உங்கள்ஒத்துழைப்பை நாடுகிறேன்.

புது விலாசம் எழுதி அறிவித்தால் e-mailக்கு அல்லது உங்கள் கடிதத்துக்கும் உடனே பதிலும் கிடைக்கும். ஜாமகாரனும் தாமதிக்காமல் உங்கள் **புது விலாசத்தில்** அனுப்பிவைக்கப்படும். காணிக்கை விவரத்தை எழுதி அறிவிக்கிறவர்கள் உங்கள் **தொலைபேசி எண்ணையும்** மறக்காமல் குறிப்பிடுங்கள். **காணிக்கை கிடைத்த விவரத்தை உங்களுக்கு தொலைப்பேசியில்** உங்களுக்கு அறிவித்து உடனே தொலைபேசி வழியாகவே உங்களுக்காகவே ஜெபிப்போம்.

# விக்கிரகத் தேவர்கள் யாவும் கடலில் மூழ்கின

**(தெற்கு ஆப்பிரிக்காவில் வியாபாரத்துக்காக இந்தியாவிலிருந்து குடியேறிய குஜராத் மாநிலத்தை சேர்ந்த இந்துமத பெண் ஒருவரின் வாழ்க்கையில் நடந்தத உண்மைச் சம்பவம்).**

**இந்தியாவிலிருந்து கென்யாவிற்குக் குடிபெயர்ந்த டினேஷா, தனது குடும்பத்துடன் அங்கு வாழ்ந்து வந்தாள். இளவயதிலிருந்து ஒரு இந்துப்பற்றுள்ள அந்தப் பெண்மணி, வழக்கப்படி விரதம் இருந்து, கும்பிட்டு, அர்ச்சனை செய்துவந்தாள். டினேஷாவின் குடும்பத்தில் அதிக பிரச்சனைகள் இருந்தன. ஆகவே அவர்கள் அதிகமாக விக்கிரகத் தேவர்களை வணங்கி வந்தார்கள். "சில வேளையில் அவைகளில் ஒன்றாவது எமக்கு உதவலாம்....." என்று நம்பிய டினேஷாவும், அவளது சகோதரியும், அதிகாலையில் மூன்று மணிக்கு எழுந்து வீட்டிலுள்ள விக்கரங்களைக் கழுவி வந்தார்கள். அவர்கள் வீட்டில் பொன்னாலும், வெள்ளியினாலுமான நூற்றுக்கணக்கான விக்கிரகங்கள் காணப்பட்டன. அவைகளில் ஒவ்வொன்றும் உடுத்தப்பட்டு, அலங்கரிக்கப்பட்டு, உணவு படைக்கப்பட்டும் வந்தன. அதன் பிற்பாடு அவர்கள் இருவரும் மணித்தியாளக்கணக்காக அந்த விக்கிரகங்கள் முன்பாக இருந்து தியானம் செய்து, எல்லாச் சடங்குகளையும் செய்து முடிப்பார்கள். காலை ஒன்பது மணிக்கு அவர்கள் தங்கள் கடையைத் திறப்பதற்கு முன்னதாக, காலைதோறும் அந்த வழிப்பாட்டைச் செய்து வருவார்கள். விக்கிரகங்களுக்குச் செய்ய வேண்டிய சகல கிரியைகளும் டினேஷாவுக்கும் அவளது சகோதரிக்கும் முக்கியமாக இருந்தது.**

**டினேஷாவினதும் அவளது குடும்பத்தாரினதும் வாழ்வு இன்னும் கஷ்டமாகவே சென்று கொண்டிருந்தன. அவளது உடலில் நோய்கள் ஆரம்பித்தது. அவைகள் பாரிச வியாதியை ஏற்படுத்தின. டினேஷா பதினான்கு தடவைகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பதினொரு தடவைகள் சத்திர சிகிச்சை பெற்றாள். அவள் வியாதிப்பட்டுங்கூட, அவளது சமயச் சடங்குகள் யாவும் இன்னும் அதிகரித்தே வந்தன. மூட நம்பிக்கைகள் போன்ற பயங்கரச் செய்கைகளும் அவளிடத்தில் ஆரம்பித்தன. என்னவெனில் பறவைகள், மிருகங்கள் போன்றவைகளின் ஆவிகளுக்கு அவள் பலி செலுத்தினாள். மந்திரம், சூனியம், சாஸ்திரம் போன்றவற்றில் வசீகரிக்கப்பட்ட டினேஷா, தனது குடும்பத்தார் ஒவ்வொருவரிலும் சந்தேகப்பட ஆரம்பித்தாள். ஆகவே அவள் தனது குடும்பத்தாருடன் பகையை உருவாக்கி தனிமையும் ஆனாள்.**

**இந்த நாட்களிலேயே டினேஷா தனது விக்கிரகங்களைத் திட்டத் தொடாங்கினாள். "நீங்கள் உண்மையிலேயே எனக்கு உதவுகிறன்றவர்களா?" என்று கேட்ட அவள் "நான் ஏன் இவ்வளவு கஷ்டப்பட வேண்டும்? எனக்கு நிம்மதியில்லை, சமாதானமில்லை நான் நோய்வாய்ப்பட்டும் போனேன்,**

எனக்கு இருந்ததெல்லாம் உங்களுக்குச் செலுத்தினேன். இனி உங்களுக்குத் தருவதற்கு என்னிடத்தில் எதுவும் இல்லை. நீங்கள் எனது வீட்டில் இருந்த வண்ணம் ஒரு அறையைப் பிடித்துக்கொண்டு இருக்கிறீர்கள். நீங்கள் பொன்னும், வெள்ளியுமாய் இருக்கிறீர்கள். நீங்கள்ஊமைகளும்,காது கேளாதவர்களுமானவர்கள். நான் கும்பிட்டுப் பிரார்த்திக்கும்போது உங்களால் கேட்கமுடியாதுள்ளது. இனி எனக்கு எல்லாம் போதும்!" இவைகளைக் கூறிய டினேஷா, அந்த விக்கிரகத் தேவர்களுக்குப் பரிட்சை கொடுக்க முன்வந்தாள். பொன்னிலும், வெள்ளியிலும் செய்யப்பட்ட அந்த விக்கிரகங்களால் நீந்த முடியுமா? என்று கேட்ட டினேஷா. "நீங்கள் உண்மையிலேயே தேவர்கள் என்றால், நான் உங்களைக் கடலில் எறியும்போது, நீங்கள் மீண்டும் மேலே வரவேண்டும். நீங்கள் உங்களைக் காத்துக்கொள்ள முடியாவிடில் மூழ்கிப்போகுங்கள். நான் இனிமேல் உங்களைப் பார்க்க விரும்பவில்லை" என்று கூறி அவைகளைக் கடலிலே எறிந்தாள். அவைகள் யாவும் கடலில் மூழ்கின.

இந்த நாட்கள் கடந்த பின்னர், ஒருநாள் டினேஷாவின் இந்து நண்பி ஒருத்தி அவளிடத்தில் வந்து, அவள் இதுவரையில் கேள்விப்படாத ஒரு கடவுளைக் குறித்து அறிவித்தாள். அந்த கடவுள் **"இசு பிரபு"** இயேசு கிறிஸ்து என்று டினேஷாவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. தன்னிடத்தில் இதுவரையில் இருந்தவைகளிலும் பார்க்க இயேசு அதிகமானவர் என்பதை டினேஷா உணர்ந்தாள். அவர்கள் இருவரும் ஒருமித்து வேறொரு இந்தியப்பெண்ணிடம் சென்றார்கள்.

அப்பெண் இயேசுவில் விசுவாசம் உள்ளவளாக இருந்தாள். அவளுடன் ஆழ்ந்த சம்பாசணையை வைத்த டினேஷா, **இயேசுகிறிஸ்து** ஒருவரே உண்மையான கடவுள் என்பதை நன்கு அறிந்தாள். எல்லா இருளான அசுத்த வல்லமைகளிலிருந்து, இயேசு அவளை விடுவிக்க வல்லவர் என்று உணர்ந்த டினேஷா அவரை ஜெபத்தில் ஏற்றுக்கொண்டாள்.

அந்த நாளிலிருந்து டினேஷா தனது வாழ்வை இந்த உண்மையுள்ள ஆண்டவரிடம் ஒப்படைத்தாள். அவள் அவருக்கு ஊழியம் செய்து, தனது சமயத்தாரும் இயேசுவை அறிய விரும்பினாள். இக்காலம் கழிந்த நாட்களில் டினேஷாவின் முழு குடும்பமும் இயேசுவில் விசுவாசம் வைக்க ஆரம்பித்தார்கள்.

நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார், தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார், அவர்களுடைய விக்கிரகங்கள் வெள்ளியும்,பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது.

அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது,

அவைகளுக்குக் காதுகளிலிருந்தும் கேளாது, அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது, அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது, அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது தங்கள் தொண்டையால் சத்தமிடவும்மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும்,அவைகளைப்போலவே இருக்கிறார்கள்.

சங்கீதம் 115:3-8.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# மனிதனின் புலம்பலும் தேவனின் ஆறுதல் வார்த்தைகளும்

*மனிதன்* : என்னை **நேசிப்பார்** யாருமில்லை

**தேவன்** : எரேமி 31:3-அநாதி சிநேகத்தால்(நான்) உன்னைச் சிநேகித்தேன்.

*மனிதன்* : எனக்கு பயமாக உள்ளது

**தேவன்** : 2 தீமோ 1:7ல் பயமுள்ள ஆவியைக் தேவன் நமக்கு கொடுக்கவில்லை.

*மனிதன்* : என்ன செய்வதென்றே தெரியவில்லை

**தேவன்** : பிலி 4:13 - என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எதையும் செய்யமுடியும்.

*மனிதன்* : **கவலைகளால்** சோர்ந்து போனேன் என்ன செய்வது?

**தேவன்** : 1 பேது 5:7- அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால்(கவலைகளை அவர்மேல் வைத்துவிடலாம்.

*மனிதன்* : எனக்கு **உதவுபவர்கள்** யார்?

**தேவன்** : சங் 50:15 - ஆபத்துக் காலத்தில்(இயேசுவை) என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன் என்று கூறியிருக்கிறார்.

*மனிதன்* : **இது என்னால் இயலாதது**

**தேவன்** : லூாக் 18:27- மனுஷரால் கூடாதவைகள் **தேவனால் கூடும்**

*மனிதன்* : நான் **சோர்ந்து போயிருக்கிறேன்**

**தேவன்** : மத் 11:28- நான் உங்களுக்கு **இளைப்பாறுதல் தருவேன்** என்று இயேசு கூறுகிறார்

*மனிதன்* : என்னால் **முன்னேறவே முடியவில்லையே**

**தேவன்** : 2 கொரி 12:9- **என் கிருபை உனக்குப் போதும்** என்று கர்த்தர் கூறுகிறார்

*மனிதன்* : என் **தேவைகளை நிறைவு** செய்யமுடியவில்லையே

**தேவன்** : பிலி 4:19- என் தேவன் **தம்முடைய ஐசுவரியத்தின்படி** உங்கள் **குறைவையெல்லாம்** கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.

*மனிதன்* : நான் **ஒரு அனாதையைப்போல்** வாழ்கிறேன்

**தேவன்** : சங் 27:10 - என் தகப்பனும், என் தாயும் **என்னைக் கைவிட்டாலும்** கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார்.

*மனிதன்* : நான் **மதியற்றவன்** என்று பிறர் ஏளனம் செய்கிறார்கள்

**தேவன்** : 2 நாளாகமம் 1:12- **ஐசுவரியத்தையும் சம்பத்தையும் கனத்தையும்** உனக்குத் தருவேன் என்று கர்த்தர் கூறுகிறார்.

*மனிதன்* : நான் ஒரு பாவி எனக்கு **மன்னிப்பு கிடைக்குமா?**

**தேவன்** : 1யோவான் 1:9- **பாவங்களை நமக்கு மன்னித்து** எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு **அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்** என்று வேதம் கூறுகிறது.

*மனிதன்* : **மரண பயம்** என்னை கலக்குகிறது

**தேவன்** : யோவான் 11:25- நானே உயிர்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். **என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்** என்று இயேசுகிறிஸ்து கூறியுள்ளார்-

- தொகுப்பு : ஜார்ஜ் மனாசா

# தேசிய கீதம் பற்றிய சில செய்திகள்:

தேசிய கீதமான ஜனகனமன அதிநாயகஜெயஹே என்ற பாடலை எழுதியவர் வங்க மாநிலமான கல்கத்தாவில் வாழ்ந்த **கவிஞர்.இரவீந்திரநாத் தாகூர்** அவர்கள். தன் தாய் பாஷையான வங்காள மொழியில் எழுதினார்.

இந்த பாடலை இந்திய தேச பாடலாக அங்கீகரிக்கப்பட்டது 1950ம் வருடமாகும்.

இந்த பாடலின் முழு வரிகளையும் பாடாமல் முதல் வரியில் உள்ள வார்த்தைகளை மட்டுமே நாடு தெரிந்துக்கொண்டது.

இந்த பாடலில் வரும் **இந்து** மாநிலமும், இப்போதுள்ள **பஞ்சாப்** மாநிலத்தின் ஒரு பாதியும் **பாகிஸ்தான்** வசம் போய்விட்டது.

## இசை அமைத்தவர்:

தேசிய பாடலை இயற்றியவரைத்தான் எல்லாருக்கும் தெரியும். ஆனால் இந்த கவிக்கு இசையமைத்தவர் **மார்கிரேட் கசின்** என்ற கிறிஸ்தவ சகோதரியாகும். என்றாலும் அந்த பாடலை இரண்டுபேர் சேர்ந்து இசையமைத்தார்கள். **ஆந்திராவில் உள்ள மதனப்பள்ளியை** சேர்ந்த **ஜேம்ஸ் H.கசின்** மற்றும் அவரது மனைவியான **திருமதி.மார்கிரேட் கசின்** ஆகிய இருவரும் இந்த பாடலுக்கு இசையமைத்தவர்களாகும்.

மதனப்பள்ளியில் **அன்னிபெசன்ட்** அம்மையாரால் அன்று உருவாக்கிய ஸ்தாபனம் தான்(தியாசப்பிகல் சொசைட்டி) இவர் உருவாக்கிய **தியாசப்பிகல் கல்லூரியில் கவி.ரவீந்திரநாத் தாகூர்** அவர்கள் தங்கியிருந்தபோது அந்த கல்லூரி முதல்வராக இருந்த **திருமதி.மார்கிரேட் கசின் அவர்கள் கவி.தாகூர்** அவர்கள் முன்னிலையில் **ஜனகனமன** பாட்டுக்கு மெட்டு அமைத்து பாடி காட்டினார். கவி.தாகூர் அவர்கள் அதை மிகவும் ரசித்தார்.

அந்த தேச பக்தியுள்ள பாடலை மரியதையோடு நாம் பாடும்போது பாடல் இயற்றிய ரவீந்திரநாத் தாகூரை மட்டுமே நினைவுகூறுவோம். ஆனால் அந்த பாடலுக்கு மிக அழகாக இராகம் அமைத்து இசை இசைத்து கொடுத்த திருமதி.மார்கிரேட் அவர்களை யாரும் கண்டுகொள்ளவில்லை என்பது துக்கமான விஷயமாகும்.


## ஆலோசனை- ஜெபத்துக்கு தொடர்புக்கொள்பவர்கள் கவனிக்கவும்:

**ஒவ்வொரு மாதத்திலும்** வாரத்தில் **செவ்வாய்கிழமை** முதல் **புதன் மதியம் வரை** மட்டுமே நான் வீட்டில் **சேலத்தில் இருப்பேன்.** ஆலோசனைக்கும்-ஜெபத்துக்கும் நேரில் **சேலம்** (தமிழ்நாட்டுக்கு) வர விரும்புகிறவர்கள், முன்பதாகவே நீங்கள் என்னை சந்திக்க விரும்பும் தேதிகளை கடிதத்தில் குறிப்பிட்டு எழுதி கேட்டு எங்களிடமிருந்து பதில் பெற்றப்பின் அல்லது போனில் தொடர்புகொண்டு சந்திக்கும் நாளை உறுதிப்படுத்திக்கொண்டு வரவும். தொலைப்பேசியில் ஆலோசனை பெறுகிறவர்கள் வேதவசன சந்தேகம் கேட்கிறவர்கள், ஜெப குறிப்புகளை பகிர்ந்துக்கொள்கிறவர்கள் காலை 8மணியிலிருந்து இரவு 11மணிவரை தொடர்புக் கொள்ளலாம். **(தினசரி** மதியம் 2 மணியிலிருந்து மாலை 5மணிவரை போனில் தொடர்புக்கொள்ள முயலவேண்டாம்.) குறிப்பிட்ட அந்த நேரம் நேரில் வருபவர்களுக்காக ஜெபிக்கும்நேரமாகும். மேலும் அது **நாங்கள் ஓய்வு** எடுக்கும் நேரமுமாகும்.

அந்த **3மணி நேரம் எங்கள் தொலைபேசியை ஆப் செய்து வைத்து விடுவோம்** என்பதை நீங்கள் அறிய விரும்புகிறேன்.

' வடஇந்திய ஊழியங்களுக்கு நான் சென்றால் **செவ்வாய்கிழமையிலும் நான்** வீட்டில் இருக்கமாட்டேன் என்பதையும் அறியவும்.

# கர்த்தருக்குள் மரித்தவர்:



**மேய்ப்பனின் குரல்** ஊழிய ஸ்தாபகரும், CMC ஆஸ்பத்திரியின் **முன்னாள் தலைமை** இன்ஜினியரும், பத்திரிக்கை ஆசிரியரும் **மேய்ப்பன் குரல்** வானொலி செய்தியாளரும், கன்வென்ஷன் செய்தியாளருமான சகோ.**C.சாமுவேல்**(வேலூர்) அவர்கள் தனது 91ம் வயதில் தெய்வ ராஜ்யத்தில் சேர்ந்துவிட்டார்.

கணவனும்,மனைவியும் இணைந்து விளம்பரம இல்லாமல் கர்த்தரின் ஊழியத்தை பல விதங்களில் செய்து நிறைவேற்றினார்கள். **சகோ.C.சாமுவேல்** அவர்கள் உயிரோடு இருக்கும்போதே மேய்ப்பனின் குரல் ஊழியம் தனக்கு பின்னும் தொடரத்தக்கதாக மேய்ப்பனின் குரல் ஊழியத்தை டிரஸ்ட்டாக அரசாங்க பதிவுசெய்து அதை **உடன்ஊழியர்கள் வசம்** ஒப்புவித்தது, சரியான ஆயத்தத்தோடு தன் ஊழியஓட்டத்தை வெற்றிகரமாக முடித்தார். சகோ.சாமுவேல் ஐயா அவர்களின் ஊழியத்துக்காக கர்த்தரை துதிக்கிறேன். அவர் விட்டுசென்ற ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பராக.

சகோதரனின் துணைவியார். திருமதி.டாலிசாமுவேல் அவர்களுக்கும், பிள்ளைகளுக்கும், உடன் ஊழியர்களுக்கும் கர்த்தர்தாமே ஆறுதல் அளித்து அவர் செய்த ஊழியங்களை தொடர்ந்து நிறைவேற்ற கர்த்தர் தாமே அவர்களுக்கு ஞானத்தையும், கிருபையும் அருளுவாராக.

## முக்கியமான ஜெபகுறிப்பு:(ஏமன்)

அரபு நாடுகளில் ஒன்றான YEMEN என்ற நாட்டில் (இது ஓமான் நாடு அல்ல!, Oman வேறு **Yemen** வேறு) இந்த நாட்டில் வேலை செய்யும் இரண்டு கிறிஸ்தவர்கள்(ஒருவர் **இம்மானுவேல் நோபல்** என்பவர், தூத்துக்குடி மாவட்டம் **மெய்ஞானபுரத்தை** சேர்ந்தவர் சிஎஸ்ஐ கிறிஸ்தவர். அடுத்தவர் **ஜோஸ்** இவர் கன்னியாகுமரி மாவட்டம் **நாகர்கோவிலை** சேர்ந்த சிஎஸ்ஐ கிறிஸ்தவர்) இவர்கள் இரண்டு பேரும் **அதிக பணஆசையால் இஸ்லாமிய** மதத்தில் சேர்ந்துவிட்டார்கள்.

இவர்கள் இரண்டுபேரும் இப்போது இதற்குமுன் போய் கொண்டிருந்த சபையையும், மற்ற கிறிஸ்தவ சபையினரையும் இஸ்லாமிய மதகுருக்குள் துணையுடன் சபை மக்களுக்கு தொல்லை கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள்.

சீக்கிரத்திலே ஏமன் நாட்டில் கூடி ஆராதிக்கும் கிறிஸ்தவ சபைகளை தனது முஸ்லீம் நண்பர்களுடன் சேர்ந்து **முத்துவாங்** என்ற முஸ்லீம் மதகுரு தலைமையில் **திடீர் தாக்குதல்** நடத்தபோவதாக தகவல் வந்துள்ளது.

**மெய்ஞானபுரம்** சபையில்உள்ள அவர் குடும்பத்தினர் அல்லது சபையினர் ஏமனில் இருக்கும் **இம்மானுவேலுக்கு** ஆலோசனை கூற கேட்டுக்கொள்கிறேன்.

அப்படியே **ஜோஸ்ஸின்** குடும்பத்தினர் **நாகர்கோவில்** உள்ள சபையினர் ஜோஸ் குடும்பத்தினரோடு பேசி ஜோசை கட்டுப்படுத்த கேட்டுக்கொள்வதோடு மட்டுமல்லாமல் ஏமனில் முஸ்லீமாய் மதத்துக்கு மாறியிருக்கும் **இம்மானுவேல்காகவும்- ஜோஸ்காகவும்** விசேஷமாக ஜெபிக்க கேட்டுக்கொள்கிறேன். முள்ளில் உதைப்பது உனக்கு நல்லதல்ல என்று இயேசு சொன்தைப்போல் ஏமனில் ஆராதிக்கும் கிறிஸ்தவர்களுக்கு இவர்களால் எந்த தீங்கும் வராதபடி அங்குகூடும் கிறிஸ்தவர்களுக்கு எந்த ஆபத்தும் வராதபடியும் வாசகர்கள் அனைவரும் ஜெபிக்க கேட்டுக்கொள்கிறேன். **- ஜாமக்காரன்.**

# கர்த்தருக்குள் மரித்தார்:

**டிரைபல் மிஷன்** மிஷனரி ஊழியத்தின் தூணாக நின்ற சகோதர்களில் ஒருவர்தான் சகோ.**K.E.ஜான்** அவர்கள். அவரை **ஜான் அச்சாயன்** என்ற அன்பு பெயரில்தான் எல்லாரும் அழைப்பார்கள்.



சகோ.**K.E.ஜான்**

**டிரைபல் மிஷன்** தொடங்கிய சில காலம் கழித்து 1978ம் ஆண்டு முதல் மிஷனரி ஸ்தாபனத்தில் பலவித பொருப்புகளை வகித்தவர்.

ஊழிய பாரம் உள்ளவர், மிக எளிமையானவர். டிரைபல் மிஷன் முன்னேற்றதுக்காக பல விதங்களில் தன் நேரம், தன் உழைப்பையும் அர்ப்பணித்தவர்.

இவர் மிஷனரி பணிதளத்தில் காட்டுக்குள் இருந்தாலும். மிஷனரி கூட்டங்களானாலும், உபவாச ஜெபகூட்டங்களானாலும் முதலில் வந்து அனைத்து ஏற்பாடுகளையும் முன்னின்று செயல்படு பவர். சகோதரன் அவர்கள் எங்கிருந்தாலும் அங்கு கலகலப்பு, சிரிப்புக்கு பஞ்சமே இருக்காது. தன்னில் எத்தனை பாரங்கள் இருந்தாலும் சிரித்த முகத்துடனே பேசி மற்றவர்களை சிரிக்க வைத்து சந்தோஷப்படுத்துவார்.

மிஷனரி பணிதளத்திலிருந்து டிரைபல் மிஷன் அலுவலகத்துக்கு வரும் மிஷனரிமார்களை தன் வீட்டில் தங்கவைத்து அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து அப்படியாக மிஷனரிகளை உபசரிப்பதிலும், கனப்படுத்துவதிலும் அவர் தன் மனைவியுடன் இணைந்து செயல்பட்டார்.

2018 மே மாதம் 28ம் தேதி சகோ.ஜான் அவர்கள் கர்த்தரிடம் தன் ஆவியை ஒப்புக்கொடுத்தார். சகோதரனின் இழப்பு டிரைபல் மிஷன் மிஷனரி ஊழியத்துக்கு பெரும் இழப்பாகும். அவர் விட்டுபோயிருக்கும் அவருடைய மனைவி, 3 ஆண் பிள்ளைகள்(அதில் ஒரு மகன் ஆயராக ஊழியம் செய்கிறார்) அந்த குடும்பத்துக்கு கர்த்தர் ஆறுதலை அளிப்பாராக.

சகோ.ஜான் அவர்கள் என்னைவிட, டாக்டர்.முரளிதர் அவர்களோடு தான் மிக நெருக்கமாக பழகியவர். அவரைப்பற்றி அவருடைய ஊழியத்தைப்பற்றி டாக்டர்.முரளிதர் அவர்கள் தன் கட்டுரையில் மிக நன்றாக எழுதியுள்ளார்.

சகோ.ஜான் அவர்களின் வாழ்க்கைக்காக, மிஷனரி ஊழியத்தில் அவரின் அபாரமான ஒத்துழைப்புக்காக தெய்வத்தை துதிக்கிறேன். அவர் குடும்பத்துக்காக ஜெபிப்போம்.

## YOU-TUBEல் என் பிரசங்கம்

யாரோ கர்த்தருடைய பிள்ளைகள் பல நாடுகளில் நான் செய்த பிரசங்கங்களை இரண்டு வித்திாசமான பெயர்களிலுள்ள YOU TUBEல் வெளியிடுகிறதாக அறிந்தேன். அந்த ஏற்பாடுகளை செய்த அன்பர்களுக்கு என் தனிப்பட்ட நன்றியை அறிவித்துக்கொள்கிறேன்.

அந்த YOU TUBEல் என் பிரசங்கம் கேட்டு ஏராளமானவர்கள் மனந்திரும்புதலின் அனுபவத்தை பெற்றதாக அறிவித்தபோது தேவனைத் துதிக்கிறேன். ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் ஒருவர் உங்கள் பிரசங்கம் YOU TUBEல் பார்த்தபோது நீங்கள் ஒரு வேத பாடம் வகுப்பு நடத்துவதைப்போல உணர்ந்தேன். பல புதிய விஷயங்களை உங்கள் செய்தி மூலமாக அறிந்துக்கொண்டேன் என்று அவர் எழுதியபோது மிகவும் சந்தோஷம் அடைந்தேன். என் பிரசங்கங்கள் **அமெரிக்காவில்,சிங்கப்பூரில்,அரேபிய நாடுகளில்** பேசியதை வெளியிட்டுள்ளார்கள். து அதோடு இன்னும் வேறு சிலநாடுகளில் பேசியதையும் Back to the Bible சத்தியவசனத்தில் பேசியதையும் வெளியிட்டுள்ளார்கள். ஆக அத்தனையும் U-டியூப்பில் வெளியிடுவதாக அறிந்தேன். ஜாமக்காரன் வாசகர்களாகிய நீங்களும் அதை கேட்டு **கண்டு** பயன்பெறலாம். அதை டவுன்லோட் செய்து மற்றவர்களுக்கும் நீங்கள் விநியோகிக்கலாம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.



# இந்திய சுதந்திர தினம்



நம் தாய்நாடான இந்தியா முழு சுதந்திரம் பெற்றதற்காக நம் தெய்வத்தை துதிப்போம். சுதந்திரத்துக்காக பாடுபட்டவர்கள், சிறை சென்றவர்கள், நாட்டுக்காக போராடியதில் தன்னை சாக கொடுத்தவர்கள், சுதந்திர தியாகிகள் சுதந்திரத்துக்காக தன் குடும்பத்தை இழந்தவர்கள், எழுத்தால்,கவிகளாய்,சமூக நாடகங்களாய், பிரச்சாரத்தால் முழு இந்தியா மக்களுக்கும் சுதந்திர உணர்வை ஊட்டியவர்கள் அத்தனை பேர்களையும் வாழ்த்துகிறேன்.

சுதந்திர போராட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஏராளம். அத்தனை பேர்களையும் வாழ்த்துகிறேன். அவர்களுக்காக ஒரு இந்திய பிரஜையாக நாம் யாவரும் பெருமை கொள்ளுவோம். வாழ்க பாரத நாடு.

AUGUST 2018

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.